

# திருக்கோயில்



செப்டம்பர்
1998

விலை
ரூபாய் ஐந்து





பழநி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயிலில் நடைபெற்ற ''தமிழ் மரபும் முருக வழிபாட்டு நெறியும்'' கருத்தரங்கினை மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு, அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். இதே விழாவில் ''பழநித் தலபுராணம்'' நூலையும் வெளியிட்டுச் சிறப்பித்தார்கள். நூலின் முதற்படியினை ஆலய அறங்காவலர் குழுத்தலைவர் திருமிகு கே.சி. பழநிசாமி அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். பழநித் திருக்கோயிலின் இணை ஆணையாளரும் நிர்வாக அதிகாரியுமான திருமிகு தி. ஜெயராமன் பி.ஏ., பிஎல்., அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்து இருந்தார்கள்.



# திருக்கோயில்



திங்கள் இதழ்

தனி இதழ் : ரூ. 5.00

ஆண்டு உறுப்பினர் கட்டணம் : ரூ. 60.00

ஆயுள் உறுப்பினர் கட்டணம் : ரூ. 500.00

| மாலை 40 | திருவள்ளுவர் ஆண்டு 2029 வெகுதானிய ஆண்டு புரட்டாசி<br>செப்டம்பர் 1998 | மணி 9 |
|---|---|---|


**சிறப்பாசிரியர்**

திருமிகு ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப.,
ஆணையாளர்

**ஆசிரியர்**

முனைவர் த. அமிர்தலிங்கம்,
எம்.ஏ., பி.எச்.டி.,

**திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்**

திரு எஸ். கனகய்யா, பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

திரு த. சுந்தரம், பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

திரு மு. இராமச்சந்திரன், பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

திரு தி. ஜெயராமன், பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.

**முகப்பு**

தோத்திரம் தந்த திருநாரையூர்
பொள்ளாப் பிள்ளையார்

## பொருளடக்கம்

தமிழில் போற்றிப்பாடல்கள்
- மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள்

விநாயகர் 108 போற்றி

பட்டினத்தடிகள்
- திருமிகு ச. மெய்கண்ட தேவன்

தமிழகத்தில் கணபதி வழிபாடு
- முனைவர் ந. கல்யாண சுந்தரம்

அட்டைப்படக்கட்டுரை
தோத்திரம் தந்த பிள்ளையார்
- முனைவர் த. அமிர்தலிங்கம்

கம்பனும் திருமுறைகளும்
- கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்

கோடையைக் குளிரச் செய்த கோயில் நிழல்
- முனைவர் மா. வண்ணமுத்து

இராமானுசரின் சமுதாயப் பணிகளும் அறிவுரைகளும்
- பரந்தாம இராமானுசாச்சாரியார்

மறைஞானசம்பந்தர்
- முனைவர் வை. இரத்தினசபாபதி

வினாவும் விடையும்

உறுப்பினர் கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி :
**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.
தொலைபேசி : 8279407

# தமிழில் போற்றிப் பாடல்கள்

**மாண்புமிகு முனைவர். மு.தமிழ்க்குடிமகன்** எம்.ஏ, பிஎச்.டி.,
தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு,
இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்

நீண்ட நாள் ஏக்கம் ஒன்று இன்று தீர்கிறது என்பதை நினைக்கும்போது எவ்வளவு மகிழ்ச்சி! இது ஒரு தனி மனிதனின் ஏக்கம் அன்று; ஒரு சமுதாயத்தின் ஏக்கம்.

அதுவும் மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆணையை ஏற்று என் தலைமையில் எங்கள் துறை எடுத்துக்கொண்ட கடுமையான முயற்சிக்குக் கிடைத்த வெற்றி இது.

தமிழில் போற்றிப் பாடல்கள் உருவாக்குவதில் இரண்டு வகையான திட்டமும் செயற்பாடும் தேவைப்பட்டன. முதலில் இறை ஈடுபாடும் நூற்புலமையும் படைத்தவர்களை ஒரு குழுவாக அமைத்தோம். சிவபெருமான், திருமால், முருகர், விநாயகர் முதலிய அனைத்துத் தெய்வங்களுக்குமான போற்றிப் பாடல்களைத் தொகுக்கச் செய்தோம். இதில் எவரும் சொந்தக்கவிதை எழுதிவிடக்கூடாது. தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், திருமுருகாற்றுப்படை போன்ற மூல நூல் வரிகள் ஒரே சீராக, இரு சீராக, மூச்சீராக அமையுமாறு பணித்தோம். அதன்படி அமைத்துக்கொண்டபின் அவற்றை அவையில் படித்து வரிவரியாக ஒழுங்கு செய்தோம். ஓர் அரங்கேற்றமே அங்கு நிகழ்ந்தது. இந்த நேரத்தில் கோயில்களில் இவற்றைப் பயன்படுத்தி நாடி வரும் இறையன்பர்களை மகிழ்விக்கும் சிவாச்சாரியார்கள், பட்டாச்சாரியார்கள், ஓதுவார்கள் ஆகியோரில் குறிப்பிட்ட சிலரையும் அழைத்து அவர்கள் முன்னிலையில் தான் இந்த வரிகள் அரங்கேற்றப்பட்டன. இது இரண்டாவது கட்டம். அதன்பின் இந்த முயற்சி பற்றிய கருத்து. திருக்கோயில்கள் உயர்மட்டக் குழுவிலும் வைக்கப்பட்டு ஏற்கப்பட்டது. அதன்பின் உருவாக்கப்பட்ட போற்றிப் பாடல்கள் தமிழகத்தில் உள்ள குறிப்பிடத்தக்க ஆதீனகர்த்தர்களுக்கு அனுப்பப்பட்டு அவர்களிடமிருந்து திருத்தங்களும் பெறப்பட்டன. அந்தத் திருத்தங்களுடன் கூடிய பட்டியல் இறுதி செய்யப்பட்டு இன்று அச்சுவடிவம் பெறுவது குறித்து உள்ளபடியே பெரிதும் மகிழ்கின்றேன். குழுவினருடன் பல மணிநேரம் நானும் அமர்ந்து வரிகளைச் செப்பம் செய்ததிலும் எங்கள் துறையின் சார்பில் இதைச் செயல்படுத்துவதிலும் தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக் கால முத்திரை என்று இதனை வெளியிடுவதிலும் (பிரகடனப்படுத்தல்) பெருமையடைகிறேன்.

இப்போது தமிழக மகளிர் பலர் அம்மன் கோயில்களை அதிகம் நாடுகின்றனர். அதனால் மாரியம்மன், கருமாரியம்மன் ஆகியோர் குறித்த போற்றி வரிகளும் வெளியிடப்படுகின்றன.

அப்பரும், சம்பந்தரும், சுந்தரமூர்த்தி சுவாமிகளும், மணிவாசகரும், ஆழ்வார்களும் விரும்பிப் போற்றிய தமிழ் வழிபாட்டை வழிபடச் செல்லும் ஒவ்வொருவரும் விரும்பிக் கேட்டு அதன் பயனை நுகர்வார்களாக!

ஆணையர் மெய்கண்டதேவன் தலைமையில் அலுவலர்குழு கடுமையாக உழைத்தது. நூல் உருவாக்கத்திற்கு வள்ளல் உள்ளம் கொண்ட அன்பர்கள் தாமே முன்வந்து உதவினர்.

இவ்வகையில் துறைச்செயலர், ஆணையர், தமிழ் அறிஞர்கள் உயர்மட்ட அறிவுரைக் குழு, உவந்து முன்வந்த வள்ளல்கள் அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றி உரியது.

**''என்னை நன்றாகக் கலைஞர் படைத்தார்
அன்னைத் தமிழுக்கு அணிசெய்யு மாறே''**

என்ற வரிகளால் என்னை இப்பணிக்கு ஆளாக்கிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குத் தலைதாழ்ந்த வணக்கங்களை உரித்தாக்குகிறேன்.

★★★

# விநாயகர் 108 போற்றி

## அருள்வேண்டுதல் - சங்கற்பம்

அநாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந்நன்னாளில்................ அவர்களுக்கும், அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும் சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம். பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை எய்தவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கல வாழ்வெய்தவும்

உமது திருவடிகளில்
மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

## அருள்மிகு விநாயகர் போற்றி

### அருள்மிகு விநாயகர் 8 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
3. ஓம் ஆனை முகத்தனே போற்றி
4. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
5. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
6. ஓம் கற்பக விநாயகா போற்றி
7. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
8. ஓம் வைத்த மாநிதியே போற்றி

### அருள்மிகு விநாயகர் 16 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் ஆதார கணபதி போற்றி
3. ஓம் ஆரண முதலே போற்றி
4. ஓம் ஆனை முகத்தனே போற்றி
5. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
6. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
7. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
8. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
9. ஓம் கற்பக விநாயகா போற்றி
10. ஓம் சங்கத் தமிழ் தருவாய் போற்றி
11. ஓம் சித்தி விநாயகா போற்றி
12. ஓம் தத்துவ முதலே போற்றி
13. ஓம் பரம தயாளா போற்றி
14. ஓம் முக்கட் கரும்பே போற்றி
15. ஓம் வெற்றித் திருவே போற்றி
16. ஓம் வைத்த மாநிதியே போற்றி

### அருள்மிகு விநாயகர் 108 போற்றிகள்

1. ஓம் அகரமென நிற்பாய் போற்றி
2. ஓம் அங்குசக் கரத்தாய் போற்றி
3. ஓம் அடியார்க் கெளியாய் போற்றி
4. ஓம் அமரர்கள் நாதா போற்றி
5. ஓம் அறக் கருணையாய் போற்றி
6. ஓம் அறிவானந்த உருவே போற்றி
7. ஓம் அறுகு சூடிய அமலா போற்றி
8. ஓம் ஆதார கணபதி போற்றி
9. ஓம் ஆரண முதலே போற்றி
10. ஓம் ஆனை முகத்தனே போற்றி
11. ஓம் இடர்தனைக் களைவாய் போற்றி
12. ஓம் இடும்பை கெடுப்பாய் போற்றி
13. ஓம் இடையூறு நீக்குவாய் போற்றி
14. ஓம் இமயச் செல்வியின் சேயே போற்றி
15. ஓம் இளம்பிறை போலும் எயிற்றினாய் போற்றி
16. ஓம் ஈசனார் மகனே போற்றி
17. ஓம் உண்மையர் உள்ளொளியே போற்றி
18. ஓம் உத்தமி புதல்வா போற்றி
19. ஓம் உயிரினுக்குயிரே போற்றி
20. ஓம் உய்வருள் பெருமாள் போற்றி
21. ஓம் உலகெலாம் ஆனாய் போற்றி
22. ஓம் உலவாத இன்பமே போற்றி
23. ஓம் உலைவிலாக் களிறே போற்றி
24. ஓம் உள்ளமுயர்த்துவாய் போற்றி
25. ஓம் உள்ளத்தறியில் உள்ளாய் போற்றி
26. ஓம் உள்நிறை ஒளியே போற்றி
27. ஓம் எண்டோளன் செல்வா போற்றி

28. ஓம் எண்ணிய ஈவாய் போற்றி
29. ஓம் எழில்வளர் சோதி போற்றி
30. ஓம் என்னுயிர்க் கமுதே போற்றி
31. ஓம் ஏழைக்கிரங்குவாய் போற்றி
32. ஓம் ஐந்து கரத்தனே போற்றி
33. ஓம் ஒளிபெற அருள்வாய் போற்றி
34. ஓம் ஒற்றைக் கொம்பனே போற்றி
35. ஓம் ஓமெனும் பொருளே போற்றி
36. ஓம் கங்கை வேணியா போற்றி
37. ஓம் கணநாத கற்பகா போற்றி
38. ஓம் கணபதிக் களிறே போற்றி
39. ஓம் கயமுகற் கடிந்தோய் போற்றி
40. ஓம் கருவிலும் காப்பாய் போற்றி
41. ஓம் கற்றோர் கருத்தே போற்றி
42. ஓம் கற்பக விநாயகா போற்றி
43. ஓம் காங்கேயன் தமையா போற்றி
44. ஓம் காலங்கடந்தோய் போற்றி
45. ஓம் காவிரிதரு சீரோய் போற்றி
46. ஓம் கிளரொளி வடிவே போற்றி
47. ஓம் குஞ்சரக் குரிசில் போற்றி
48. ஓம் கூவிள மாலையாய் போற்றி
49. ஓம் கைப்போதகமே போற்றி
50. ஓம் சக்கரந் தரித்தோய் போற்றி
51. ஓம் சங்கத்தமிழ் தருவாய் போற்றி
52. ஓம் சந்திர சேகரா போற்றி
53. ஓம் சித்தத் தேனே போற்றி
54. ஓம் சித்தி விநாயகா போற்றி
55. ஓம் சித்தி புத்தி மணாளா போற்றி
56. ஓம் சிவ கணபதியே போற்றி
57. ஓம் சீர்பெற அருள்வோய் போற்றி
58. ஓம் செல்வக் கணேசா போற்றி
59. ஓம் செல்வமருள்வோய் போற்றி
60. ஓம் செல்வ நீறு தருவாய் போற்றி
61. ஓம் சேமம் தருவோய் போற்றி
62. ஓம் ஞானக் கொழுந்தே போற்றி
63. ஓம் தத்துவ முதலே போற்றி
64. ஓம் தத்துவப் பேறுதருவாய் போற்றி
65. ஓம் தந்தி முகனே போற்றி
66. ஓம் தந்தையாக் காப்பாய் போற்றி
67. ஓம் தழைத்திட வருவாய் போற்றி
68. ஓம் தற்பர விநாயகா போற்றி
69. ஓம் தாரக மறையே போற்றி
70. ஓம் துப்பார் மேனியனே போற்றி
71. ஓம் தொண்டர்தம் துணையே போற்றி
72. ஓம் நச்சினார்க்கினியோய் போற்றி
73. ஓம் நந்திமகனே போற்றி
74. ஓம் நாத முடிவே போற்றி
75. ஓம் நாவமர் பாட்டே போற்றி
76. ஓம் நான்ற வாயினை போற்றி
77. ஓம் நிறைவாழ்வருள்வாய் போற்றி
78. ஓம் நூற்பொருள் அளிப்பாய் போற்றி
79. ஓம் நெஞ்சநோய் தீர்ப்பாய் போற்றி
80. ஓம் பகையினைக் களைவாய் போற்றி
81. ஓம் பண்ணிடைத் தமிழே போற்றி
82. ஓம் பண்பிலார்க்கு அரியாய் போற்றி
83. ஓம் பரம தயாளா போற்றி
84. ஓம் பரிதிபோல் மதிதருவாய் போற்றி
85. ஓம் பாதிமதி சூடி போற்றி
86. ஓம் பிணிகள் களைவாய் போற்றி
87. ஓம் பிரணவக் களிறே போற்றி
88. ஓம் பிள்ளைகள் தலைவா போற்றி
89. ஓம் புண்ணிய மூர்த்தி போற்றி
90. ஓம் பேழை வயிற்றினாய் போற்றி
91. ஓம் பையரவசைத்தாய் போற்றி
92. ஓம் போக நாயகா போற்றி
93. ஓம் போத வடிவே போற்றி
94. ஓம் மணிநீல கண்டா போற்றி
95. ஓம் மன்றாடி மைந்தா போற்றி
96. ஓம் மாசிலா மணியே போற்றி
97. ஓம் முக்கட் கரும்பே போற்றி
98. ஓம் முடியா முதலே போற்றி
99. ஓம் முத்தமிழ் முதல்வா போற்றி
100. ஓம் மெய்ப்பொருள் நீயே போற்றி
101. ஓம் மோதகக் கையினாய் போற்றி
102. ஓம் யாவு மானாய் போற்றி
103. ஓம் யோகியர் தலைவா போற்றி
104. ஓம் வல்லமை வல்லவா போற்றி
105. ஓம் விகடசக்கர விநாயகா போற்றி
106. ஓம் விண்மழை தருவாய் போற்றி
107. ஓம் வெற்றித் திருவே போற்றி
108. ஓம் வைத்த மாநிதியே போற்றி போற்றி.

## பாடல் : விநாயகர்

**ஐந்து கரத்தனை யானை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே!**

## வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்

**அருள்மிகு விநாயகப் பெருமான் அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக, உங்களின் எல்லா விருப்பமும் நிறைவேறுக, மங்களம் உண்டாகுக.**

★★★

# பட்டினத்தடிகள்

— திருமிகு ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப.,

அருளாளர்கள் கொண்டாடும் பேரருளாளர் நம் பட்டினத்தடிகள் ஆவார்.

தாயுமான சுவாமிகள் பட்டினத்தாரைப் போற்றியுள்ள இரு பாடல்களை இங்கு நாம் நினைவது நன்று.

**''பாரனைத்தும் பொய் எனவே**
**பட்டினத்துப்**
**பிள்ளையைப் போல்ஆருந் துறக்கை**
**அரிதரிது''**

**''ஒட்டுடன் பற்றின்றி உலகைத் துறந்த**
**செல்வப்**
**பட்டினத்தார் பத்திரகிரி பண்புணர்வது**
**எந்நாளோ?''**

இவ்வாறு தாயுமானவ சுவாமிகள் போற்றும் பட்டினத்தடிகளை மாற்றிய ஒரு வாசகம் - ஒப்பற்ற வாசகம்.

**''காதற்ற ஊசியும் வாராது காண்**
**கடைவழிக்கே''**

என்ற வாசகம் ஆகும்.

இந்த ஒப்பற்ற வாசகத்தால் **''திருவெண் காடராக''**த் திகழ்ந்தவரைப் **பட்டினத்தடிகள்** ஆக்கி ஆட்கொண்டார் இறைவர் என்பது யாவரும் அறிந்துகொள்ள வேண்டிய அருள்வரலாறாகும்.

இந்த ஒப்பற்ற ஒரு வாசகத்தால் தான் கோடானுகோடி பொன்னுக்குரிய **பொருட் செல்வ ராக** இருந்த ''திருவெண்காடரை'' ஒப்பேதும் இல்லா **அருட்செல்வராக** மாற்றி ஆட்கொண்டார் இறைவர் என்பதும் யாவரும் உணர்ந்து போற்ற வேண்டிய அருள் வரலாறாகும்.

பிள்ளையில்லாக் குறையால் வாடிய பெருஞ்செல்வர் **திருவெண்காடருக்குத் திருவிடை மருதூர் இறைவரே குழந்தையாக வந்து** சேர்ந்தார் என்பதும், வில்வமரத்தடியில் குழந்தை யாகக் கிடந்து, அருச்சகர் சிவசருமர் என்பார் வாயிலாகத் திருவெண்காடருக்குப் பிள்ளையாக வந்து **''மருத வாண''னாக வளர்ந்து** திருவெண் காடரின் பிள்ளை யில்லாக் குறையையும், சிவ சருமரின் செல்வமில் லாக் குறையையும் ஒருசேர தீர்த்தருளினார் **வாராத செல்வங்கள் யாவும் வருவித்தருளவல்ல திருவிடை மருதூர்** இறைவர் என்பது வரலாறு.

அதுகாறும் **திருவெண்காடரின்** எண்ண மெல்லாம் கப்பல் வணிகத்தை வளர்ப்பதிலேயே திளைத்து இருந்தது. சொன்ன விசாரமே விசாரமாக, செல்வத்துள் செல்வம் பொருட் செல்வமே என்பதாக கோடிச்செல்வத்தை பலநூறுகோடிச் செல்வமாக **வணிகத்தில் வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டு அருள்நோக்கத்தில் ஆர்வம் இல்லாத வராகத் திகழ்ந்துள்ளார்** திருவெண்காடர்.

அவ்வாறு பொருள்நாட்டம் மிகக் கொண் டிருந்த பட்டினத்துச் செட்டியார் தம்பிள்ளை மருத வாணண் கடல்கடந்த பல நாடுகளுக்கும் சென்று கப்பல் வணிகத்தில் ஈட்டிவந்தன இறுதியிலே எல்லோருக்கும் தேவைப்படுவதான எருமுட்டைகள் என்பதாகக் கண்டுதம் செல்வமகனைக் கோபித்துக் கொண்டார்; **மருதவாணராம் இறைவரும் ஒரு சிறு பெட்டியினைத் தம் தாயாரிடம் கொடுத்து, திருவிடைமருதூர் சென்று லிங்கத்தில் அங்கமாய் ஒன்றிவிட்டார்.**

மருதவாணன் கொண்டுவந்த எருமுட்டைகள் சாதாரண எரு மூட்டைகளாக இல்லாமல், விலை மதிப்பில்லா மாணிக்க **மணிகளை உள்ளடக்கிய அற்புத மூட்டைகளாகத் திகழ்ந்திடக் கண்டு**, தம் அருமை மகனைக் கோபித்துக் கொண்டாமே என்று இல்லம் ஓடோடிவந்து மகனைத் தேடிய திருவெண் காடருக்குத் தம் துணைவியார் நீட்டிய சிறுபெட்டிதான் கிடைத்தது.

அச்சிறு பெட்டியைத் திறந்து திருவெண் காடர் காதற்ற ஊசி ஒன்றும், ஓலைச்சுருளொன்றும் அதனுள் இருக்கக் கண்டார். ஓலைச்சுருளைப் பிரித்துப் படித்தார். அதன்கண்



அருளாளர் பட்டினத்தார் விழா 7.8.98 அன்று மிகச்சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில் தலைமையுரை ஆற்றிய ஆணையாளர் திருமிகு ச. மெய்கண்டதேவன் இ.ஆ.ப. அவர்கள் ''பட்டினத்தார் திருக்கோயில் வரலாறு'' நூலை வெளியிட்டார்கள். பண்டித நடேசனாரும், திருக்கோயில் ஆசிரியர் முனைவர் த. அமிர்தலிங்கம் மற்றும் அறிஞர் பெருமக்கள் இவ்விழாவில் பங்கு பெற்றனர். உதவி ஆணையர் திரு ஜெயராமன், ஆலய நிர்வாக அதிகாரி திரு சேகர் ஆகியோர் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

''காதற்ற ஊசியும் வாராது காணும்
கடைவழிக்கே''

என்று எழுதப்பட்டிருந்தது. அவ்வாசகம் ஒன்றே பொருட்செல்வராய் இருந்த பட்டினத்துச் செட்டியாரை அருளாளர்கள் போற்றும் அருட்செல்வராய்-பட்டினத்து அடிகளாக ஒரே நொடியில் மாற்றிவிட்ட மாபெரும் விந்தையை என்னென்று வியப்பது.

''மாடுண்டு கன்றுண்டு மக்கள் உண்டு
என்று மகிழ்வ தெல்லாம்
கேடுண்டு எனும்படி கேட்டுவிட்டோம்
இனிக் கேள்மனமே
ஓடுண்டு கந்தையுண்டு உள்ளே
எழுத்தைந்தும் ஓதஉண்டு
தோடுண்ட கண்டன் அடியார்
நமக்குத் துணையும் உண்டே''

என்பதாக இடுப்பில் பட்டாடை உடுத்தியிருந்ததைக் களைந்து ஒரு கந்தல் ஆடை உடுத்தவராகத் தம் கணக்காளர் சேந்தனாரை அழைத்து ''எல்லாச் செல்வத்தையும் அறம்செய்து விடுக'' என்று திருவாய் மலர்ந்தவராகத் திருவருளைச் தேடிப் புறப்பட்டுவிட்டார் போற்றுதலுக்குரிய பேரருளாளராம்நம் பட்டினத்தடிகள்.

இந்த நிகழ்ச்சி யாவும் ஒரு நொடி நேரத்தில் நடைபெற்றுவிட்ட மாபெரும் விந்தையாகும். இதனை எண்ணிஎண்ணி வியந்து போற்றுகின்றார் தாயுமானவ சுவாமிகள்.

பட்டினத்தடிகளின் காலம். கி.பி. பத்தாம் நூற்றாண்டு எனப் பலரும் கூறுகின்றார்கள். அன்று அவர் சேர்த்திருந்த கோடானகோடிப் பொருட்செல்வம் யார்யாருக்கு வழங்கப்பட்டது என்பதை நாமறியோம். ஆனால் அன்று அவர் பாடிவைத்த திருவருட்செல்வம் இன்றும் அழியாத பேரானந்தப் பெருஞ்செல்வமாக நமக்குப் பதினோராம் திருமுறையில் தொகுத்துவைத்து வழங்கப்பட்டு வருகின்றது. பட்டினத்தடிகளின் பாடல்கள் பாமரரும் அறிந்து போற்றக்கூடிய பெருஞ்சிறப்பினைப் பெற்று விளங்குவது தனிச் சிறப்பு.

பதினோராம் திருமுறையில் பட்டினத்தடிகள் பாடியருளியுள்ள ஐந்து நூல்கள் இடம்பெற்றுள்ளன. அவை **1. கோயில் நான்மணிமாலை 2. திருக்கழுமல மும்மணிக் கோவை 3. திருவிடைமருதூர்மும்**

மணிக்கோவை 4. திரு ஏகம்பமுடையார் திரு வந்தாதி. 5. திருவொற்றியூர் ஒருபா ஒரு பஃது ஆகியனவாகும்.

இவையன்றி பலநூறு அருட்பாடல்களைக் கற்றாரும் கல்லாரும் படித்துப் பயன்பெறும் வகையிலே பாடிச் சென்றுள்ள பட்டினத்தடிகள், அவ்வருட் பாக்களின் வழி இன்றும் இஞ்ஞாலத்தை உய்வித்து வருகின்றார் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அவற்றுள் ஒருசில பாடல்களை இங்குக் காட்டவேண்டுவது கடமையாகிறது. கரும்பாய் கற்கண்டாய் - தெள்ளமுதாய் தித்திக்கும் பேரானந்தப் பெரும்பாடல்களாம் அவற்றைச் சுவைத்தால் சுவைப் பார்க்கு முத்திவீடு எளிதாகும் என்பது திண்ணம்.

நாட்டமென்றே இரு' சற்குரு பாதத்தை
நம்புபொம்ம
லாட்டமென்றே இரு! பொல்லா உடலை
அடர்ந்த சந்தைக்
கூட்டமென்றே இரு! சுற்றத்தை வாழ்வைக்
குடங்கவிழ்நீர்
ஓட்டமென்றே இரு! நெஞ்சே!
உனக்குபதேசம் இதே''

''நல்லார் இணக்கமும் நின்பூசை நேசமும்
ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ? அகமும்
பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும்
எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா கச்சி
ஏகம்பனே.''

''பிறக்கும் பொழுது கொடுவந்ததில்லை
பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடுபோவ தில்லை
இடைநடுவில்
குறிக்கும் இச் செல்வம் சிவன்தந்த தென்று
கொடுக்க அறியாது
இறக்கும் குலாமருக் கென் சொல்லுவேன்
கச்சி ஏகம்பனே''

''ஊரும் சதமல்ல உற்றார் சதமல்ல
உற்றுப்பெற்ற
பேரும் சதமல்ல பெண்டிர் சதமல்ல
பிள்ளைகளும்
சீரும் சதமல்ல செல்வம் சதமல்ல
தேசத்திலே
யாரும் சதமல்ல நின்தாள் சதம்கச்சி
ஏகம்பனே''

''முடிசார்ந்த மன்னரும் மற்றுமுள்ளோரும்
முடிவில் ஒரு
பிடிசாம்ப ராய் வெந்து மண்ணாவதுங்
கண்டு பின்னுமிந்தப்
படிசார்ந்த வாழ்வை நினைப்பது அல்லால்
பொன்னின் அம்பலவர்
அடிசார்ந்து நாமுய்ய வேண்டும் என்றே
அறிவார் இல்லையே''

''வீடுநமக்குத் திருவாலங்காடு விமலர் தந்த
ஓடு நமக்கு உண்டு வற்றாத பாத்திரம் ஓங்கு
செல்வ
நாடு நமக்குஉண்டு கேட்டதெல்லாம்
நமக்குத்தர நன்னெஞ்சமே
ஈடு நமக்குச் சொல்லவோ ஒருவரும்
இங்கில்லையே''

''அத்தமும் வாழ்வும் அகத்துமட்டே விழி
அம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மிவிம்மி
இரு
கைத்தலம் மேல்வைத்து அழும் மைந்தரும்
சுடுகாடு மட்டே
பற்றித் தொடரும் இருவினை புண்ணிய
பாவமுமே''

இவ்வாறு ஒவ்வொரு பாடலும் ஒப்பற்ற - திருவருட்செல்வத்தை வாரி வழங்குகின்ற ஞானப் பாடலாக விளங்குவதைக் காணுகின்றோம்.

வினையின் காரணமாக வந்து இவ்வுலகத்தில் பிறக்கின்றோம். வினையைத் தீர்க்கும் வாயிலாகவே மனைவி, மக்கள், சுற்றம், நட்பு ஆகிய உறவுகளும், அவற்றின் பிரிவுகளும் வாய்க்கின்றன. வினை மேன்மேலும் ஏறாமல் இறைவனை உருகிப் பற்றி வாழ்ந்திடவேண்டும். வினைமுற்றும் நீங்கினால் தினைப்போதும் தேகம் நிற்காது நீங்கிவிடும் என் பனவெல்லாம் அருளாளர் பட்டினத்தார் நமக்கு அருளியுள்ள ஆன்மீக ஞானங்களாகும்.

சமயப்பற்று, சாதிப்பற்று, மக்கள்பற்று முதலான பற்றுக்களைப் பற்றுவதால் பிறவிகளே மிகும் என்று கூறும் பட்டினத்தடிகள்

''அன்னை எத்தனை எத்தனை அன்னையோ
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ
பின்னை எத்தனை எத்தனை பெண்டிரோ
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ
முன்னம் எத்தனை எத்தனை சென்மமோ
மூடனாய் அடியேன் ஒன்றும் அறிந்திலேன்
இன்னம் எத்தனை எத்தனை சென்மமோ.
என்செய்வேன் கச்சி ஏகம்ப நாதனே''

என்று பிறவிகளைக் கணக்கிட இயலாத நிலையைக் காட்டுகிறார் ஒரு பாடலிலே.

இறைவன் திருவடி மறவாமையே பிறவியை நீக்கும் மருந்து என்பதையும் அவரே

''பிறவா திருக்க வரம்தரல் வேண்டும்
பிறந்துவிட்டால்
இறவாதிருக்க மருந்துண்டுகாண் இதுஎப்படியோ
அறமார் புகழ்த்தில்லை அம்பலவாணர்
அடிக்கமலம்
மறவாதிரு மனமே அதுகாண் நன்மருந்து
உனக்கே''

என்று பிறவிதீர வழியும் ஒருபாடலில் கூறுகின்றார்.

அருட்பிரகாச வள்ளலார் ''மரணமிலாப் பெருவாழ்வு''க்கான கருத்தைப் பட்டினத்தாரின் இப்பாடல்வழி பெற்றிருத்தல் கூடும்.

பட்டினத்தடிகளின் பாடல்கள் ஒரு சமயத் தாருக்கோ, ஓரினத்தாருக்கோ மட்டும் உரியன அல்ல. அவை இஞ்ஞாலத்திற்கே பொதுவான ஞானச் செல்வமாகும்.

அவருடைய கீழ்க்காணும் ஒரே ஒருபாடலை உலகமக்கள் உணர்ந்து, அப்பாடலில் கூறப்பட்டுள்ள அறக்கருத்தினை அடியொற்றி வாழ முற்படுவார்களே யானால் வையகமே வானகமாகி எல்லோரும் இன்புற்றுத் திளைத்திருப்பர் என்பது திண்ணம். பட்டினத்தடிகள் வையகம் வானகம் ஆக வழி காட்டியுள்ள ஒப்பற்ற அவ்வொரு பாடல் பின் வருமாறு:

''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு
உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார்
நல்லறமும் நட்பும்
நன்றென்றிரு நடு நீங்கா மலே
நமக்கு இட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கு
உபதேசம் இதே''

பட்டினத்தடிகள் தம் மனத்திற்கு மட்டுமல்ல; மன்பதைக்கே உரைத்த ஒப்பற்ற உபதேசம் ஆகும் இது.

செல்வத்தைத் துறந்த ஞானிகளும் தாயன்பைத் துறவார் என்பதும் பட்டினத்தடிகளின் வாழ்விலிருந்து உணருகின்றோம். தாயை யார்தான் மறக்க இயலும்? அங்கிங்கு எனாதபடி எங்கும் நிறைந்து நீக்கமற விளங்கும் இறைவன், தான் எங்கும் நீக்கமற விளங்குதல் வேண்டும் என்பதற்காக அல்லவா தாயாகித் தரணியில் எங்கும் விளங்கு கின்றான். ஆகவே ஈன்ற தாயை மறப்பது இறைவனை மறப்பதற்கு ஒப்பாகிவிடும்.

செல்வத்தைத் துறந்த பட்டினத்தடிகள் தம் தாயார் வாழும் காலமெல்லாம் காவிரிப் பூம்பட் டினத்திலேயே இருந்து தம்தாயார் மறைவுற்றபோது வாழை மட்டையிலே அவரைப்படுக்க வைத்து எரிமூட்டினார் என்பது வரலாறு. '' தாயிற் சிறந்த கோயிலும் இல்லை.'' அத்தாயினைச் சிறப்பித்துப் பட்டினத்தடிகள் பாடிய பாடல்களும் உலகிலேயே உயர்ந்த ஞானச்செல்வமாக இன்றும என்றும் விளங்கித்திகழும் என்பது உண்மை.

அப்பாடல்களில் ஒருசில பின்வருமாறு:

'' ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம்
நொந்து பெற்றுப்
பையல் என்ற போதே பரிந்தெடுத்து - செய்ய
இரு
கைப்புறத்தில் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பிற் காண்பேன் இனி'

''முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்து
அந்திப்பக லாய்ச்சிவனை ஆதரித்துத் தொந்தி
சரியச் சுமந்துபெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல்மூட்டு வேன்''
''வீற்றிருந் தாள்அன்னை வீதிதனில்
இருந்தாள்
நேற்றிருந்தாள் இன்றுவெந்து நீறானாள்-
பால்தெளிக்க
எல்லீரும் வாருங்கள் ஏதென் றிரங்காமல்
எல்லாம் சிவமயமே ஆம்''

தாயார் மறைவுக்கு இரங்கிப் பாடினாலும் எல்லாம் சிவமயமென உணர்தல் உலகோர் கடமை என்பதையும் இப்பாடல்களிலேயே பட்டினத்தார் உணர்த்தி விடுகின்ற ஞானக் கருணையைக் காணு கின்றோம்.

தமிழகத்தில் எண்ணற்ற பல தலங்களையும் தரிசித்து, வடநாடும் சென்று இறைவனை வணங்கிப் போற்றிய பட்டினத்தடிகள், வடநாட்டில் உஞ்சேனை மாகாளத்தை ஆண்ட மன்னர் ஒருவரையும் பத்திர கிரியார் எனும் தம் அடியாராகக் கொண்டு சிறப்புற்ற அருள் வரலாறு விரிவாக நூல்வழி கற்றுப் பயன் பெற்றிடுதல் மெய்யன்பர்கள் கடமையாகும்.

இறுதியில் நம் பட்டினத்தடிகள் வந்து சமாதி கண்ட பெருமை, இன்று அவர்தம் விழாவைக் கொண்டாடும் இத்திருவொற்றியூர் திருவிடத்திற்கே உண்டு என்பதனை நாம் நினைந்து மகிழக் கடமைப்பட்டிருக்கின்றோம்.



''வாவி எல்லாம் தீர்த்தம் மணல் எல்லாம்
வெண்ணீறு
காவனங்கள் எல்லாம் கணநாதர் - பூவுலகில்
ஈது சிவலோகம் என்றென்றே மெய்த்
தவத்தோர்
ஓதும் திருவொற்றி யூர்''

பட்டினத்தடிகள் இக்கடற்கரை மணலைச் சிவலிங்கமாகக் கண்டு வணங்கி சிறுவர்களோடு கண்மூடி விளையாடித் தாமும் சிவலிங்கம் ஆனார். அந்தப் புண்ணிய திருநாள் இந்நாள்; அந்தப் புண்ணிய ருக்கென்று அமைந்த திருக்கோயில் இத்திருக்கோயில்.

''திருவொற்றியூர் ஒருபா ஒருபது'' நூலில் அவரே இறைவர்மேல் தூய தமிழில் போற்றிகள் புகழ்ந்து பாடியிருக்கக் காண்கின்றோம்.

அவற்றை இறுதியாக வைத்து இக்கட்டுரையை நிறைவு செய்வோமாக!

''காலற் சீறிய கழலோய் போற்றி!
மூலத் தொகுதி முதல்வ போற்றி
ஒற்றி மாநகர் உடையோய் போற்றி
முற்று மாகிய முதல்வ போற்றி
அணைதொறும் சிறக்கும் அமிர்தே போற்றி
இணைபிரிதில்லா ஈசா போற்றி
ஆர்வம் செய்பவர்க்கு அணியாய் போற்றி
தீர்வில் இன்சுவைத் தேனே போற்றி
வஞ்சனை மாந்தரை மறந்தோய் போற்றி
நஞ்சினை அமுதாய் நயந்தனை போற்றி.....
விரிகடல் வையக வித்தே போற்றிபோற்றி.

★★★

# தமிழ்நாட்டில் கணபதி வழிபாடு

- பேராசிரியர் முனைவர் ந. கல்யாணசுந்தரம்

(திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள தமிழ்ப்பேராசிரியர் முனைவர் ந.கல்யாணசுந்தரம் அவர்கள் வழங்கியுள்ள அரிய ஆய்வு கட்டுரை இது. விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு வெளியிடப்பெறுகின்றது)

### 32 வகைக் கணபதிகள்

முத்தல புராணம் முப்பத்திரண்டு வகைக் கணபதிகளைக் குறிப்பிடுகின்றது. ஸ்ரீதத்துவ நிதி அவற்றிற்குரிய நிறங்களையும் தியான சுலோகங்களையும் கூறுகிறது. 32 வகைக் கணபதிகளும் நிரல்களும் பின்வருமாறு:

| முத்கலப் புராணம் | ஸ்ரீ தத்துவ நிதி |
|---|---|
| 1. பால கணபதி | - செந்நிறம் |
| 2. தருண கணபதி | - நண்பகல் சூரியன் |
| 3. பக்தி கணபதி | - மதிபோல் வெண்மை |
| 4. வீர கணபதி | - செம்மேனி |
| 5. சக்தி கணபதி | - செவ்வந்தி வானம் |
| 6. துவிச கணபதி | - மதிபோல வெண்மை |
| 7. சித்தி கணபதி | - பொன்கலந்த பசுமை |
| 8. உச்சிட்ட கணபதி | - நீலநிறம் |
| 9. விக்கின கணபதி | - பொன்மேனி |
| 10. சிப்பிர கணபதி | - செவ்வரத்தம் பூ |
| 11. ஏரம்ப கணபதி | - பசுமை கலந்த கருமை |
| 12. இலட்சுமி கணபதி | - வெண்மை |
| 13. மகா கணபதி | - செங்கதிர் |
| 14. விசய கணபதி | - செந்நிறம் |
| 15. நிருத்த கணபதி | - பொன்போல் நிறம் |
| 16. ஊர்த்துவ கணபதி | - பொன் வண்ணம் |
| 17. ஏகாட்சர கணபதி | - செந்நிறம் |
| 18. வரகணபதி | - செவ்வண்ணம் |
| 19. திரயாட்சரகணபதி | - பொன்னிறம் |
| 20. சிப்ரபிரசாத கணபதி | - செம்மை |
| 21. அரித்திரா கணபதி | - மஞ்சள் |
| 22. ஏகதந்த கணபதி | - நீலம் |
| 23. சிருஷ்டி கணபதி | - சிவப்பு |
| 24. உத்தண்ட கணபதி | - செம்மை |
| 25. ரணமோசன கணபதி | - வெண்பளிங்கு |
| 26. துண்டி கணபதி | - செம்மை |
| 27. துவிமுக கணபதி | - பசுநீலம் |
| 28. மும்முக கணபதி | - செம்மை |
| 29. சிங்க கணபதி | - பொன்னிறம் |
| 30. யோக கணபதி | - இளஞ்சூரியன் |
| 31. துர்க்கா கணபதி | - சுட்ட பசும்பொன் |
| 32. சங்கடஹர கணபதி | - இளஞ்சூரியன் |

### சிறப்புத் தன்மை வாய்ந்த கணபதிகள்

தமிழ் நாட்டில் ஓரிடத்தில் மட்டுமே காணத்தகும் அமைப்புடைய கணபதி சிலைகள் ஆங்காங்கே அமைந்துள்ளன. அவற்றின் தன்மைகளைக் காண்போம்.



### 1. நிறம் மாறும் விநாயகர்

தக்கலை (குமரி) அருகேயுள்ள கேரளபுரத்தில் மகாதேவர் கோயிலில் சுவாமிக்கு வலப்புறம் ஓர் அரச மரத்தடியில் உள்ள விநாயகர் ஆவணிமாதத்திலிருந்து ஆறுமாதம் வெள்ளை நிறமாகவும் மாசிமாதத்திலிருந்து ஆறுமாதம் கறுப்புநிறமாகவும் தோற்றமளிக்கிறார். இச்சிலை சந்திரகாந்தக் கல்லால் உருவாக்கப்பட்டது என்பர். ஆய்வாளர் வெண்மையாக இருக்கும்போதும் கண்டார். கருமையாக இருக்கும்போதும் கண்டார். அவருக்குப் பின்புறமுள்ள அரசமரமும் வியக்கும் வகையில் உள்ளது. விநாயகர் வெண்மையாயிருக்கும்போது அரசமரத்தின் முன்

பகுதிக் கிளைகளில் இலைகள் செழுமையாயிருக் கின்றன. பின்பகுதி இலையை உதிர்த்து விடுகின்றது. இம்மரத்துக்கும் கல்லுக்குமுள்ள தொடர்பு ஆராயத் தக்கது.

## 2. தேன் உறிஞ்சும் விநாயகர்


திருப்புறம்பயம் (தஞ்சை) சாட்சி நாதர் கோயிலுள்ள வெள்ளம் (பிரளயம்) காத்த விநாயக ருக்கு ஆவணி மாதம் விநாயக சதுர்த்தியன்று தேனபி டேகம் நடைபெறும். தேனை விநாயகர் உறிஞ்சி விடுகிறார். இவ்விநாயகர் கடல்படு பொருட்களான நத்தைக்கூடு. கிளிஞ்சல்கள், கடல்நுரை, சங்குகள், கடற்பஞ்சு முதலியவற்றால் அமைக்கப்பெற்றவர். விநாயகர் சதுர்த்தியன்று இரவு எட்டுமணி முதல் விடியும்வரை அபிடேகம் நடைபெறும். ஒருடின் (20படி) தேன் அபிடேகத்திற்கு வரும். ஒரு துணியில் 1 படி தேனை நனைத்து ஒத்தி எடுப்பர் என்றும் அப் போது அச்சிலை தேன் முழுவதையும் உறிஞ்சிவிடும் என்றும், மீண்டும் மீண்டும் அவ்வாறே செய்வர் என்றும், முன்பு இதைப்போல் இருமடங்கு தேனை இவ்விநாயகர் உறிஞ்சியதாகவும் கூறுகின்றனர்.

## 3. திருப்பரங்குன்றம் கரும்புவிநாயகர்

திருப்பரங்குன்றம் (மதுரை) கோயிலில் முருகனுக்கு இடப்புறம் விளங்கும் கற்பகவிநாயகர் மேல் கைகள் இரண்டிலும் கரும்பினை-வில் போல் பிடித்துள்ளார். கீழ் வலக்கையில் தந்தம் விளங்க, கீழ் இடக்கை தொடையில் உள்ளது. தாமரை இருக்கை யில் அமர்ந்துள்ளார். அவருக்கு மேலே பூதகணங் களும் தேவமாதரும் உளர். மேற்கைகளில் பாச அங்குசம் இல்லாத சிலை இது. கரும்பினை இவ்வாறு பிடித்த நிலையிலுள்ள சிலை வேறெங்குமில்லை. இது கி.பி. 6 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த பாண்டியர் காலச்சிற்பமாகும்.

## 4. வெண்ணெய் விநாயகர்

சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில், நுழைவுவாயிலின் வலம்புரி விநாயகர் காட்சி தருகிறார். மேல் வலக்கையில் அங்குசமும் மேல் இடக்கையில் பாசமும் தாங்கியுள்ளார். கீழ் வலக்கையில் வெண்ணெய் உள்ளது. நீண்ட துதிக்கை அதைத் தொடுகிறது. கீழ் இடக்கையில் தண்டாயுதம் உள்ளது. இவருக்கு வெண்ணெய் சாத்திவழிபட்டனர். இக்காலத்தில் வெண்ணெய் சாத்துவது இல்லை.



## 5. கற்பக விநாயகர்

பிள்ளையார்பட்டி (பசும்பொன்) கற்பக விநாயகரின் தோற்றம் அவரைத் தமிழ்நாட்டு விநாய கருள் முந்தியவராகக் காட்டுகிறது. அவர் இரண்டு கைகளைக் கொண்டு விளங்குகிறார். அங்குச பாசங்கள் இல்லை. கால்கள் மடிந்திருக்க அமர்ந்தநிலை. இடக் கையை இடையில் நாட்டி அமர்ந்துள்ளார். வலக் கையில் சிவலிங்கம் தாங்கியுள்ளமை. இடப் புற முள்ள தந்தம் குறுகிக் காணப்படுவது ஆகியன இவரது தனித்தன்மைகளாகும். பாண்டியரது கி.பி. 5ஆம் நூற்றாண்டு கல்வெட்டு இவரது குகைக் கோயிலில் உள்ளது. இவர் புடைப்புச்சிற்பமாக விளங்குகிறார்.

## 6. நரமுக விநாயகர்

சிதம்பரம் தெற்கு வீதியில் மனிதமுகத்தோடு கூடிய நரமுக விநாயகர் உள்ளார். கலைக்களஞ்சி யம் தொகுதி மூன்றில் (பக்127) திருச்செங்காட்டாங் குடியிலும் இத்தகைய விநாயகர் உள்ளார் எனப்படம் வெளியிட்டுள்ளனர். ஆக தமிழ்நாட்டில் இரு நரமுக விநாயகர்கள் உள்ளனர். இவரைச் சிறப்புத்தன்மை விநாயகர்களாகக் கொள்ளலாம்.

## 7. மூக்கறு விநாயகர்

விநாயகரை மட்டுமே குறைபாடுடைய சிலை யாக இருந்தாலும் வைத்து வழிபடலாம் என்கின்ற னர். காட்டுமன்னார்குடியிலிருந்து (தெ.ஆ) ஏழு கி.மீட்டர் தொலைவிலுள்ளது வேலம்பூண்டி. இங்கு மூக்கறு விநாயகர் சிலை உள்ளது. துதிக்கை முற் றிலுமாக வெட்டப்பட்டுள்ளது. ஆசிரியர் சிவசுப் பிரமணியன் என்பார் குதிரைகள் பூட்டிய தேர் வடி வில் கோயில் கட்டியுள்ளார். இதைப் போன்ற விநாயகர் வேறெங்குமில்லை எனத் தினமலர் குறிப்பிடுகிறது.

ஆயினும் இதே போன்ற சிலையைத் திருமங் கலம் (மதுரை) பேருந்து நிலையத்திற்கு முன்பு

ஆய்வாளர் கண்டார். ஆனால் இச்சிலையில் தலை வெட்டப்பட்டு ஒட்ட வைக்கப்பட்டுள்ளது. விபூதி இவர் மேல் கொட்டப்பட்டுள்ளது. கணபதி வழிபாட்டில் உறுப்புக்குறைந்த சிலைகள் இடம் பெறலாம் என்பர்.

### 8. மொட்டை விநாயகர்

மதுரை விளக்குத்தூண் அருகே கீழமாசி வீதியில் இவரது கோயில் உள்ளது. இச்சிலை முகலாயர் படையெடுப்பால் சேதமுற்றது. முகம், கை கால்களை இழந்து விளங்குவதால் இவரை மொட்டை விநாயகர் என அழைக்கின்றனர்.

### 9. ஆதி விநாயகர்

சிவில்லிப்புத்தூர் அருகே திருவண்ணாமலைக் கோயில் குன்றின் அடிவாரத்தில் உள்ளார். குளத்தில் மறைந்திருந்த இவர் வெளிக்கொணரப்பெற்றார். இவர் 17 அடி உயரம், (பீடம் 6 அடி என்பர்) ஆய்வாளர் கண்ட அமர்ந்த கோலவிநாயகருள் அதிக உயரமானவர் இவர் எனலாம். அதுமட்டுமல்ல. இவரது துதிக்கையில் திருநீற்றுப்பட்டைகள் மேடுகளாக ஆங்காங்கே செதுக்கப்பட்டுள்ளன. திருவக்கரை (தெ.ஆ) விநாயகர் மிகவும் உயரமானவர் என்பாருமுளர்.



### 10. கங்கைகண்ட விநாயகர்

கும்பகோணம் (தஞ்சை) நாகேசுவரர் கோயில் சுவாமி மகாமண்டபத்தில் வலப்புறம் நிறுவப்பட்டுள்ளார். கங்கை கண்ட கணபதி. கி.பி 11 ஆம் நூற்றாண்டில் முதல் இராசேந்திரசோழன் வங்கத்திலிருந்து கொண்டு வந்து நிறுவிய சிலை என்பர். வலக்கை மேற்கையில் தந்தமும் கீழ்க்கையில் அட்சமாலையும் கொண்டு விளங்குகிறார். இடக்கை மேற்கையில் இலட்டுத் தட்டினையும், கீழ்க்கையில் தண்டாயுதம் ஊன்றிய நிலையிலும் விளங்குகிறார். மேலே தேவமாதர் உள்ளனர்.

### 11. தான் தோன்றி விநாயகர்

மருதமலை (கோவை) அடிவாரத்தில் காணப்படும் தான் தோன்றி விநாயகர் போன்ற அமைப்பு தமிழ்நாட்டில் வேறெங்குமில்லை.

### 12. வெள்ளைப்பிள்ளையார்.

திருவலஞ்சுழி (தஞ்சை) யிலுள்ள வெள்ளைப் பிள்ளையார் தோன்றிய வரலாறு புராண அடிப்படையிலானது. தேவரும் அசுரரும் திருப்பாற் கடலைக் கடைந்த போது அதினின்றும் ஆலகால விடம் தோன்றியது. விநாயகரை வணங்காமல் தொடங்கியதால் இவ்வாறு ஆயிற்றென்று கருதிக் கடல்நுரையால் விநாயகரை அமைத்து வழிபட்டனர். பின் அமுதம் பெற்றனர். அதுவே இவ்வெள்ளை விநாயகர். இவருக்கு திருமுழுக்கு இல்லை. பச்சைக் கற்பூரம் மட்டுமே சாத்தப்படுகிறது. திருப்புறம்பயம் வெள்ளை விநாயகர் சிலையில் சங்குகளும் இடம் பெற்றுள்ளன. அவர் செந்நிறம் வாய்ந்தவர். கடல் நுரையிலான பிள்ளையார் தமிழ்நாட்டில் வேறெங்குமில்லை.

### 13. சோணபத்திரக்கல்

திருநல்லூரில் (தஞ்சை) சோணபத்திரக் கல்லைப் பிள்ளையாராக வழிபடுகின்றனர். வேறு கோயில்களில் இருப்பதாகத் தெரியவில்லை.

### 14. திருநீலகண்ட விநாயகர்

சுசீந்திரம் (குமரி) தாணுமாலயன் கோயிலில் உள்ள திருநீலகண்ட விநாயகர் முன்புள்ள மேடையில் நவக்கிரகங்கள் தத்தம் வாகனங்களில் அமைந்துள்ளனர். மேலே இராசிமண்டலம் உள்ளது. இத்தகைய அமைப்பு வேறு விநாயகர் கோயில்களில் இல்லை.

### 15. ஆதியந்தப் பிரபு

சென்னை அடையாறு மத்திய கைலாசு ஆலயத்தில் கணபதியின் இடப்புறம் அனுமன் தோன்றுகிறார். கணபதி பாதி அனுமன் பாதி யாக அமைந்த செப்புச்சிலை நிறுவப்பட்டுள்ளது. கந்தகிரி (சேலம்)யிலும் இத்தகைய திருவுரு உள்ளது.

### 16. நாகபாசக் கணபதி

சங்கரநயினார்கோயில்(நெல்லை) கோமதியம்மை உடனாய சங்கரலிங்க சுவாமி கோயிலில்

கன்னிமூலையில் விளங்கும் கணபதி பாச அங்குசங்கட்குப் பதிலாக பாம்பினைப் பிடித்து ஆட்டுகிறார். அதே திருச்சுற்றில் பாம்புப்புற்றும் உண்டு. நாகபாசம் கணபதியின் ஆயுதங்களில் ஒன்றாகும்.

### 17. ஈச்சனாரி விநாயகர்

ஈச்சனாரி(கோவை) விநாயகர் திருமேனியில் உருத்திராக்க மாலைகள் சிலையிலே வடிக்கப்பெற்றுள்ளமை தனிச்சிறப்பாகும்.

### 18. மாயப்பிள்ளையார்

திருப்பத்தூரில் (வ.ஆ.) மாயப்பிள்ளையார் திடீரென்று தோன்றியிருக்கிறார். சிறுவர் விளையாட்டாகப் பூசை செய்து வந்த விநாயகர் இன்று வளர்ந்து இடுப்பளவு பூமியிலிருந்து வெளிவந்திருக்கிறார். நள்ளிரவில் ஒரு பாம்பு அப்பிள்ளையாரைச் சுற்றிக் கொண்டிருப்பதைப் பலர் கண்டனராம்.

### 19. பாதிரிப்பிள்ளையார்


திருப்பாதிரிப்புலியூரில் மேற்கு மதில் விநாயகர் தம் மேல்திருக்கரங்கள் இரண்டிலும் பாதிரிப் பூக்களைப் பற்றிக் கொண்டிருக்கிறார்.

### 20. கயிலாசநாதர் கோயில் விநாயகர்

காஞ்சி கயிலாய நாதர் கோயிலுள்ள பிள்ளையார்பொதுவான அமைப்பிலிருந்து மாறுபட்டுள்ளார். வலது மேற்கைகளில் பாசம், அங்குசம், வலது கீழ்க் கையில் தந்தம், இடக்கை கொழுக்கட்டை ஏந்தவில்லை. மாறாக இடத்தொடையில் அமர்த்தப்பட்டுள்ளது. துதிக்கை மேல் நோக்கி வளைந்துள்ளது. அதில் கொழுக்கட்டை உள்ளது. இவர் காலத்தில் இடக்கையில் கொழுக்கட்டை கொடுக்கும் வழக்கமில்லை என அறிகிறோம். மணற்கல்லால் அமைந்த சிற்பம் இது. இராச சிம்ம பல்லவனும் அவன் மகன் மூன்றாம் மகேந்திரனும் அமைத்த கோயில் இது. பல்லவர் கோயில் பரிவார தேவதையாகக் கணபதி முதலில் காணப்படுவது இங்கு தான்.

### 21. ஆறுமுக கணபதி

பாண்டிச்சேரி மணக்குள விநாயகர் கோயில் வலப்புறச்சுவரில் ஆறுமுகப்பிள்ளையார் புடைப்புச் சிற்பமாகக் காணப்படுகிறார்.



### 22. ஒலி எழுப்பும் கணபதி

காஞ்சிபுரம் பஞ்சுப் பேட்டைப் பகுதியில் திருவோண காந்தன்தளி என்னும் பாடல் பெற்ற கோயிலில் கருவறை மண்டபத்தின் நுழை வாயிற் சுவரின் முகப்பில் விநாயகர் திருவுருவம் உள்ளது. அவர் அருகே காதுகளை அணுகவைத்துக் கேட்டால் ஒருவகை ஓங்கார ஒலி ஒலிப்பதைக் கேட்கலாம். இவ்வாறான முருகன் சிற்பம் நெல்லையருகே உள்ளது.

### 23. பதினாறு கைகள் கொண்டவர்

சங்கரன் கோயில் (நெல்லை) சங்கரலிங்க சுவாமி கோயில் திருச்சுற்றில் வடபுறம் சுவரில் பதினாறு கைகளைக் கொண்ட உச்சிட்ட கணபதி உருவம் அமைந்துள்ளது. இவ்வுரு சிவனையும் மிஞ்சியவர் கணபதி என்பதைக் காட்டுகிறது.

### 24. இருகைகளிலும் கொழுக்கட்டை

சேலம் சுகவனேசுவரர் கோயிலில் ஔவையாரால் பாடப்பெற்ற கணபதி கீழ்க்கைகள் இரண்டிலும் கொழுக்கட்டை ஏந்தியவராகக் காணப்படுகிறார்.

### கணபதி கையில் ஏந்தும் பொருட்கள்

1. பாசம் - இது கயிறு, நாகமே பாசமாக அமைவதுமுண்டு
2. அங்குசம் - யானையை அடக்கப்பயன்படுவது
3. தந்தம் - ஒடிந்த யானைக் கொம்பு
4. வேதாளம் - வீரகணபதி கையில் விளங்கும் பூதம்
5. சக்திவேல் - வீரகணபதிக்குரியது
6. அம்பு
7. வில்
8. சக்கரம். -இதுபல வடிவங்கள் பெறும்.

9. கத்தி - பிச்சுவா என்பர். தலைப் பக்கம் மண்டை ஓடுபோலிருக்கும்
10. கேடகம் - வெட்டினைத் தடுக்கப் பயன்படுத்துவது
11. சம்மட்டி - கனத்த தலைப்பகுதியுடையது. இரும்பாலானது
12. கதை - குண்டந்தடி
13. நாகபாசம் - பாம்பே கயிறாக அமையும்
14. சூலம் - மூன்று நுனிகளையுடையது
15. குந்தாலி - தலைக்கனத்து கூரிய நுனியுடைய இரும்பு
16. மழு - வாய்ச்சி எனும் கருவியின் வேறுபட்டது
17. கொடி - வெற்றிக்கு அறிகுறி
18. தண்டம் - நீளமான கைத்தடி
19. கமண்டலம் - நீர் வைக்கும் பாத்திரம்
20. பரசு - மழுப்போன்றது
21. கரும்புவில் - மன்மதனை வென்றதைக் காட்டும்
22. சங்கு - வெற்றியை அறிவிப்பது
23. பூ அம்பு - மன்மதனிடம் பறித்தவை
24. கோடரி - வெட்டுவதற்குப் பயன்படும்
25. அட்சமாலை - உருத்திராக்கமாலை
26. சாமரம் - கவரிமான் முடி
27. கட்டுவாங்கம் - நீளமான கத்தி
28. தீ அகல் - தீப்பிழம்பு
29. வீணை - வீரர்க்கு உணர்ச்சியூட்டுவது

இவையனைத்தும் கணபதி என்னும் நூலில் கண்டவை.



## பெண்கோலம்

கணபதியைப் பெண்ணுருவில் காண விரும்பிய சிற்பிகள் தமிழ்நாட்டுப் பெரிய சிவன் கோயிலிலுள்ள தூண்களிலும், தேர்களிலும் கணேசானி, வைநாயகி, விக்கினேசுவரி என்றழைக்கப்படும் பெண் பிள்ளையார்களைச் செதுக்கியுள்ளனர். பிள்ளையாரின் பெண் வடிவிற்குப் புராண வரலாறில்லை. வடநாட்டில் இத்தகைய சிலைகள் உள.

## சுசீந்திரம்அமர்ந்தகோலம்

சுசீந்திரம் (குமரி) தாணுமாலயன் கோயிலின் சிவன் சந்நிதியில் இடப்புறமுள்ள தூணில் கணேசானி உருவம் அமைந்துள்ளது. சுமார் இரண்டடி உயரத்தில் உள்ளது. விநாயகரைப் போலவே மேல் வலக்கையில் அங்குசமும் மேல் இடக்கையில் பாசமும் கொண்டிருக்கிறார். அபய வரத முத்திரைகளை முறையே கீழ் வலக்கையும், கீழ் இடக்கையும் கொண்டுள்ளன. கணேசானி சிலைகளில் இடுப்புக்குக் கீழே மனிதனுடைய கால் அமைப்புக் கொண்ட சிலை இஃதொன்றேயாம். வலக்காலைமடித்து இடக்காலைத் தொங்கிவிட்ட நிலையில் அமர்ந்துள் ளார். இவ்வுரு கி.பி. 15-ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பட்டது.


பெண் தன்மை வாய்ந்த பிள்ளையாரின் மூலம் காண முயன்ற முனைவர் எஸ்.பத்மனாபன் திருஞானசம்பந்தரின் 'பிடியதன் உரு உமை கொண்டதை'க் குறிப்பிடுகிறார். ஆயினும் சுசீந்திரம் கணேசானி உருவைப் பார்வதிதேவி கொண்ட பிடிவேடமாகக் கருதுதல் இயலாது. ஏனெனில் இவ்வுருவில் களிற்றுக் குரிய நீண்ட கொம்பு காணப் படுகிறது.

## மதுரை-நின்ற கோலம்

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் சுவாமி சந்நிதியில் இடப்புறமுள்ள துவாரபாலகருக்கு முன்புள்ள தூணில் கணேசானி உருகாணப்படுகிறது. இருகைகளைக் கொண்ட உருவம் இது. வலக்கையில் மீனாட்சியம்மை போல பூச்செண்டு தாங்கியும் இடக்கையைத் தொங்கவிட்டும் உள்ளார். அரைக்குக் கீழேயாழியின் உருவம் உள்ளது. இவ்வுருவம் நாயக்க மன்னர் காலத்தில் கி.பி 17 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்டது.

## வீணை ஏந்திய கணேசானி

நாகர்கோயில் (குமரி) வடிவீசுரம் அழகம்மை கோயிலில் சுவாமிக்கு நேராக அமைந்த துவாரபாலகருள் வலப்புறம் அமைந்த துவாரபாலகர் நிற்கும் தூணின் புறத்தே ஓரடி உயரத்தில் கணேசானி உரு உள்ளது. இஃதும் அரைக்குக் கீழே யாழை வடிவம் உடையாததாகக் காணப்படுகிறது. இது கைகளில் வீணையைத் தாங்கியுள்ளது.



சுசீந்திரம் கோயில் தெப்பக்குளக்கரையி லுள்ள திருவாடுதுறை மண்டபத்துத்தூண் ஒன்றி லும் மேற்கூறியவாறமைந்த கணேசானி உருவம் உள்ளது.

**போர்க்காலம்**

போர்க்காலம் கொண்ட கணோசானி உருவம் வாசுதேவ நல்லூர் (நெல்லை) தேரில் உள்ளது. அரைக் குக் கீழே யாழி உருவம். வாலை மேல தூக்கிக் கொண்டு ஓடுவதுபோன்ற தோற்றம். ஒரு கையில் கோடாரி மற்றொரு கையில் வாளும் கொண்டு விளங்குகிறார். பெண்களும் வாளேந்தலாம் என் பதை அன்றே குறிப்பாகக் காட்டியுள்ளான் தமிழ் நாட்டுச் சிற்பி.

சென்னை அரசு அருங்காட்சியகத்தில் பழநி (மதுரை)யிலிருந்து பெறப்பட்ட கி.பி. 18-ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கணேசானி உருவம் உள்ளது. இதிலும் இடுப்புக்குக் கீழேயாழி உருவமும் இடக் கையில் கேடகமும் வலக்கையில் தண்டமும் கொண்டு வாலைக்கிளப்பிக் கொண்டும் வாயைப் பிளந்து கொண்டும் நிற்கக் காணலாம்.

**கணபதி வழிபாட்டிற்குரிய பச்சிலைகள்**

'யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை' என்பது திருமூலர் வாக்கு. விநாயகருக்குரிய ஒரு பச்சிலையாகக் கொள்ளப்படுவது அறுகு. சிவனுக்கு வில்வம்; திருமாலுக்குத் துளசி. ஆயினும் கணபதி வழிபாட்டில் அருச்சனைக்குரிய பச்சிலைகளாக இருபத்தொனறு இடம் பெறுகின்றன.

| விநாயகபுராணம் இணைப்பு | | புட்பவிதி |
|---|---|---|
| 1. அறுகு | - | 1. அறுகு |
| 2. இலந்தை | - | 2. நொச்சி-1 |
| 3. மாசிப்பச்சை. | - | 3. மாசிப்பச்சை |
| 4. கரிசலாங்கண்ணி | - | 4. கையாந்தகரை-கரிசலாங்கண்ணி |
| 5. வில்வம் | - | 5. வில்வம் |
| 6. ஊமத்தை | - | 6. ஊமத்தை |
| 7. துளசி (சதுர்த்தியன்று மட்டும்) | - | 7. கத்திரி-2 |
| 8. நாயுருவி | - | 8. நாயுருவி |
| 9. சிறுவழுதலை | - | 9. தேவதாரு-3 |
| 10. வன்னி | - | 10. வன்னி |
| 11. மந்தாரை | - | 11. நெல்லி-4 |
| 12. மருவு | - | 12. மருவு |
| 13. அலரி | - | 13 அலரி |
| 14. கோங்கு | - | 14. சிறுசெண்பகம்-5 |
| 15. வெள்ளெருக்கு | - | 15. எருக்கு |
| 16. மருதம் | - | 16. மருதம் |
| 17. விஷ்ணுகிராந்தி | - | 17. விஷ்ணுகரந்தை |
| 18. மாதுளை | - | 18. மாதுளை |
| 19. சாதிமல்லி | - | 19. பாதிரி-6 |
| 20. தாழை | - | 20. செந்தாழை |
| 21. அகத்திக்கீரை | - | 21. காட்டகத்தி |

கணபதிக்கு இருபத்தொன்று என்ற எண் சிறப்பாகக் கொள்ளப்படுதல் பற்றி கணேச கோசா கூறுவதாவது. பஞ்ச பூதங்கள் 5, தன் மாத்திரை 5, பொறி 5, புலன் 5, பிராணன் 1 ஆக இருபத் தொன்று.

இவ்விருபத்தோரு பச்சிலைகளின் மருத்துவப் பயன்களையும் **மூலிகை மர்மம். அனுபவம்** மற்றும் **பொருட்பண்பு** நூல்களின் அடிப்படையில் காண் போம்.

| பச்சிலை | | மருத்துவப்பயன் |
|---|---|---|
| 1. அறுகு | - | உடல் வெப்பம் நீக்கி, வெள்ளை, வெட்டை போக்கும், விடமும் நீங்கும். (மூ.ம.பக்.2,3) |
| 2. இலந்தை | - | இலையை அரைத்துக் காடியில் கரைத்துக் கடைந்து பூச உடம்பில் எரிச்சல் மாறும். (மூ.ம.ப.22) |
| 3. மாசிப்பச்சை (மாசிப்பத்திரி) | - | வெப்பமும் சூதகவலியும் போக்கும். |

4. கரிசலாங்கண்ணி (கையாந்தகரை) - இதனுடன் தும்பை, அம்மான் பச்சரிசி சேர்த்து இடித்து, சாறு பிழிந்து 12 மிளகு அரைத்துக் கலக்கி ஆவின்பால் கால்படி கலக்கிச் சீனி சேர்த்து ஆறு நாள் குடிக்க காமாலை குண மாகும். (மூ.ம.ப.57)

5. வில்வம் - இலையை ஊறவைத்த நீர் சூட்டைத் தணிக்கும் (பொ.ப.-ப.640)

6. ஊமத்தை - இலையை அரைத்து எருமை வெண்ணெயில் குழைத்து அக்கி ரணத் தின் மேல் பூச அவை ஆறும். (மூ.ம.ப.28) ஆஸ்துமா உடையவர் இலையைப்புகைப்பர் (அனுபவம்)

7. துளசி - இலைச்சாறு சளி, இருமல் போக்கும் (அனுபவம்)

8. நாயுருவி - பல்லைத் தூய்மையாக் கும். (அனுபவம்) தேள்கடிவிடம் நீக்கும். இலை சுரம் போக்கும். (பொ.ப.ப.454)

9. சிறுவழுதலை - இத்துடன் சீந்தில், தாமரைவளையம் கோரைக் கிழங்கு, சுக்கு வகைக்கு ஒரு பலம் எடுத்து இடித்து 2 படி நீர்விட்டு கால் படியாக வற்றவைத்து மூன்று வேளை அருந்த விஷ சுரம் நீங்கும் (மூ.ப. 68)

10. வன்னி - இலை சொறி, சிரங்குக்கு மருந்தாகும். (பொ.ப.)

11. காட்டுமந்தாரை (காட்டாத்தி) - பூ - மலமிளக்கி (பொ.ப.ப.570)

12. மருவு - இலையைத் தலையில் வைப்பதால் பேன் சாகும். (பொ.ப.ப.574) உடலை உரமாக்கும். சொறி சிரங்கு குண மாகும். (மருக்கொழுந்து)



13. அலரி - அலரிச்செடியின் சமூல மும் (முழுதும்) கடுக்காயும் சுட்டுக்கரியாக்கி நல்லெண்ணெய் வேப்பெண்ணையில் குழைத்து சிரங்குகட்குத் தடவக் குணமாகும். (மூ.ம.ப.8)

14. கோங்கு - கோங்கிலவனிலையால் ஆக்கப்பட்ட பவழபற்பம் இருமல் போக்கும் (மூ.ம.ப.59)

15. வெள்ளெருக்கு - வெள்ளெருக்கம் பழுப்புச்சாறு 1, 1/8 படி நல்லெண்ணெய் 1 படிக்கு, இந்துப்பு அதிமதுரம், வசம்பு, திப்பிலி மூலம், வெள்ளுள்ளி வகைக்கு 1 பலம் இடித்துப் போட்டு காய்ச்சிய தைலம் தேய்த்து முழுக ஒற்றைத் தலைவலி நீங்கும் (மூ.ம.ப.30)

16. மருதம் - உடற்கழிவினைப் போக்கும். நஞ்சினைப் போக்கும்

17. விட்டுணுகரந்தை - விட்டுணு கிராந்திப் பொடி பிள்ளைப் பேறுண்டாக்கும். (பொ.ப.ப.648)

18. மாதுளை - மாதுளை விதை மேகக். கடுப்பு நீக்கும், (மூ.ம.ப.98)



| | | |
|---|---|---|
| *19. சாதிமல்லி* | - | *தலையில் சூட, தலை வலிபோகும். (அனுபவம்)* |
| *20. தாழை* | - | *தாழைவேர் சர்பத் சொறி, சிரங்கு நீக்கும் (மூ.ம.ப.76)* |
| *21. அகத்தி* | - | *அகத்திக் கொழுந்து பிடியளவு தின்ன வாய்ப் புண் குணமாகும். இலைச்சாறும் நல் லெண்ணெயும் சம மாய்க்கூட்டி வெந்தயத் தைப் பாலிலரைத்துப் போட்டுத் தலை முழுகி வர சகல சூடும் தணியும். (மூ.ம.ப.5,6) வாரமிரு முறை சமைத்துண்ண பித்தம் அணுகாது.* |
| *(அல்லது) காட்டாத்தி* | - | *மூலத்தைப் பாலில கொள்ள மந்தம், காசம் சாந்தியாகும் (மூ.ம.ப.47) இலை கழிச்சல், மந்தம் இருமல் போக்கும் (பொ.ப.ப.226)* |

## வேறுபட்ட பச்சிலைகளின் பயன்கள்

| | | |
|---|---|---|
| *1. நொச்சி* | - | *இலையை வீட்டு மூலை களில் போட்டால் பூச்சிகள் சேரா. சாற்றைக் கட்டிகளின் மேல் பற்றும் போட அவை கரைந்து போகும். வீக்கங் குறையும் தலையிலிட தலைவலி குணமாகும். (மூ.ம.ப.78)* |
| *2. கத்திரி (கண்டங்கத்திரி)* | - | *கண்டங்கத்திரி சமூலத்தைச் சுட்டுக்கரியாக்கிப் பொடித்துப் பல்துலக்கப் பல்வலி, பல் சொத்தை குணமாகும். (மூ.ம.ப.39)* |
| *3. தேவதாரு* | - | *தேவதாரு மூலத்தைப் பாலில் அரைத்துக் கலக்கி உண்ணப் பழைய சுரம் தீரும்.(மூ.ம.ப.78)* |
| *4. நெல்லி* | - | *நெல்லி வற்றல் செய்து சீனி பால் கூட்டி அருந்த பித்தச் சூடு தணியும்.(மூ.ம.ப.87)* |
| *5. சிறுசெண்பகம்* | - | *செண்பக மொட்டைக் கியாழம் செய்து பால் சர்க்கரை சேர்த்து அருந்த பித்தசுரம் மேகம், நீங்கும் (மூ.ம.ப.63)* |
| *6. பாதிரி* | - | *பூ, தீச்சுரமும் மேகமும் நீக்கும் (பொ.ப.ப.524)* |

## அறுகின் தனிச்சிறப்பு

அறுகு, ஓரிடத்தில் முளைத்து ஆறிடங்களில் வேரூன்றும். அதே போல குண்டலினியில் வசிக்கும் கணபதி ஆறாதாரங்களில் தங்கித் தழைக்கச் செய்கிறார். யோகிகள் மூலாதார வெப்பம் போக்க அறுகுக் கியாழம் (குடிநீர்) அருந்துவர். சென்னை போன்ற இடங்களில் அறுகம்புல் சாறு கடைகளில் விலைக்குக் கிடைக்கிறது.

★★★

# தோத்திரம் தந்த பிள்ளையார்

முனைவர் த. அமிர்தலிங்கம்

*(அட்டைப்படத்திலுள்ள திருநாரையூர் பொள்ளாப்பிள்ளையார் அருள்வரலாறு)*

தில்லைத்திருத்தலத்திற்குத் தென்மேற்கில் காட்டுமன்னார் கோயிலுக்குச் செல்லும் வழியில் 16 கி.மீ. தொலைவில் அமைந்துவிளங்கும் திருத்தலமே திருநாரையூர்.

காவிரிக்கு வடகரையில் அமைந்துள்ள 63 சிவத்தலங்களுள் முப்பத்து மூன்றாவது திருத்தலம் தான் திருநாரையூர். திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் பாடியுள்ள திருத்தலம்.

தேவதத்தன் என்னும் கந்தருவன் வான்வழி பறந்து வந்தபோது இவ்வூரிற்கு வந்தான். மரம் ஒன்றில் கனிபறித்து உண்ட அவன், மரத்தின்கீழ் தவம் செய்துகொண்டிருந்த துருவாச முனிவர்மீது பழங்களைத் தவற விட்டகாரணத்தால் அவருடைய சாபத்திற்கு ஆளாகி நாரையானான். திருநாரையூரில் எழுந்தருளியிருக்கும் சௌந்தரேசுவரரை வழிபட்டுப் பேறுபெற்றமையால், திருநாரையூர் எனும் பெயரும் இத்திருத்தலத்திற்கு அமைந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருநாரையூரைச் ''செல்வத் திருஞாரையூர்'' எனப் போற்றியுள்ளார் திருஞானசம்பந்தர். செல்வத்திருநாரையூரைக் கைதொழுதால் தேடாமலே செல்வம் வரும்; வாடாமலே நன்மை வரும். எங்கும் ஓடாமலே பெருமை வரும் என்றும் திருஞானசம்பந்தர் விவரித்திருப்பதைக் கீழ்வரும் அவர்தம் தேவாரப் பாடலால் நாம் அறியலாம்.

**''தனம் வரும் நன்மை ஆகும்**
**தகுதிக்குஉழந்து வருதிக்கு உழன்ற உடலில்**
**இனம்வளர் ஐவர் செய்யும்**
**வினயங்கள் செற்று**
**நினைவொன்று சிந்தை பெருகும்**
**முனமொருகால் மூன்று புரம் வெந்து மங்கச்**
**சரம் மூன்று எரிந்த அவுணர்**
**சினமொருகால் அழித்த சிவன் மேயச்**
**செல்வத் திருநாரையூர் கைதொழவே''**

இத்தகு அருமையான திருத்தலத்தில் சுயம்பு மூர்த்தியாக - உளியால் ஒருவரும் பொள்ளாப் பிள்ளையாராக எழுந்தருளியிருப்பவரே பொள்ளாப் பிள்ளையார் ஆவார். நல்லார்க்கும் பொல்லார்க்கும் நலம் கொடுக்கும் நாயகரைச் சிலர் ''பொள்ளாப் பிள்ளையார்'' என அழையாமல் ''பொல்லாப் பிள்ளையார்'' என அழைக்கின்றனர். பொல்லா அரக்கரைப் பொருது நசுக்குவதால் இவர் ''பொல்லாப் பிள்ளயாரும்'' ஆவார்.

இப்பொள்ளாப் பிள்ளையாரை நித்தம் பூசனை புரிந்து வந்த ஆதிசைவர் அனந்தேசர் ஆவார். இவர்தம் மனைவியார் பெருகுதிருமனையறத்தின் வேறெனத் திகழ்ந்த பெருமைக்குரியவர் கலியாணி அம்மையார். இவர்களுக்குப் பொள்ளாப் பிள்ளையார் அருளாலே போற்றிடும் பிள்ளையாக வந்து தோன்றிய வரே நம்பியாண்டார் நம்பி ஆவார்.

நம்பியாண்டார் நம்பியின் தந்தை அனந்தேசுவரர் ஒருநாள் வெளியூர் செல்ல நேர்ந்தது. பொள்ளாப் பிள்ளையாருக்குப் பூசனை செய்யும்பேறு தவத்தால் வந்துதித்த செல்வ மைந்தருக்கு அமைந்தது. ''கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய பொள்ளார் இணைமலர் நல்லார் புனைவரே'' என்ற சிவஞான போத மங்கல வாழ்த்தினுக்கு ஏற்ப முறையாகப் பூசித்தார் நம்பி. பூசனையின் நிறைவில் திருஅமுது தாம் படைத்ததை இன்னும் ஏன் உண்ணவில்லை என்று உள்ளம் மறுகி வேண்டிக்கொண்டதோடு, ''உண்ணாவிடில் உயிர் விடுவேன்'' என்பதாக சிலையில் தலையை மோதிக்கொள்ள முற்பட்டார். என்னே தும்பிக்கையாள் திருவருள்!

நம்பியாண்டார் நம்பியைத் தம் திருக்கரத்தால் தாங்கித் தடுத்தருளிய அத்தி முகத்தான் நம்பியாண்டார் காண அவர் முன்தோன்றி திருஅமுது முழுமையும் உண்டு மகிழ்வித்தார். ''பள்ளிக்குச் செல்ல காலம் கடந்ததே'' எனக் கவலையுற்ற நம்பியாண்டார் நம்பிக்கு ஞான நாயகனே கலைகள் அனைத்தையும் கற்பித்தருளிய கருணையை என்னென்று உறி வியப்பது!

***''என்னை நினைந்தடிமை கொண்டு என்***
***இடர் கெடுத்துத்***
***தன்னை நினையத் தருகின்றான் - புன்னை***

**விரசுமகிழ் சோலை வியன்நாரை யூர்முக்கண்**
**அரசுமகிழ் அத்திமுகத் தான்''**

என்று நம்பியாண்டார் நம்பிகளே ''திருநாரையூர் விநாயகர் திருஇரட்டை மணிமாலை'' நூலில் பொள் ளாப் பிள்ளையார் தமக்கருளிய அருட்திறத்தை வியந்து போற்றியிருக்கின்றார்.

பொள்ளாப்பிள்ளையார் திருவருளால் நம்பி யாண்டார் நம்பிகள் திருநாரையூர் விநாயகர் திரு இரட்டைமணிமாலை நீங்கலாக மேலும் ஒன்பது அருள் நூல்களை இயற்றியுள்ளார்கள். பதினோராம் திருமுறையில் இடம்பெற்று விளங்கும் அந்நூல்களின் பெயர்விவரம் பின்வருமாறு:

**கோயிற் திருப்பண்ணியர் விருத்தம்**
**திருத்தொண்டர் திருவந்தாதி**
**ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி**
**ஆளுடைய பிள்ளையார் திருச்சண்பைவிருத்தம்**
**ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக்கோவை**
**ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை**
**ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம்**
**ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை**
**திருநாவுக்கரசுதேவர் திரு ஏகாதசமாலை.**

நம்பியாண்டார் நம்பி தாம் இயற்றிய நூற் பணியை விடவும், தோத்திர நூல்களாக தேவாரத் திருமுறைகளைப் பொள்ளாப் பிள்ளையார் திருவரு ளால் தேடித்தந்த சிறப்பு எண்ணி எண்ணி மகிழ்தற் குரிய வரலாற்றுப் பெருஞ்சிறப்பு ஆகும்.

ஞாலம் உய்ய, நாம் உய்ய, நம்பி சைவ நன் னெறியின் சீலம் உய்ய திருமுறைகளைத் தேடித்தந்த பெருஞ்சிறப்பினை என்னென்பது?

நம்பியாண்டார் நம்பி வாழ்ந்திருந்த காலத் தில் சோழநாட்டை ஆண்டிருந்த சிறந்த சிவபக்தனான அபயகுலசேகரன் (இவனே முதலாம் இராசராச சோழன் எனக்கூறுவர். மாறுபட்ட கருத்துகளும் உள) திருமுறை கண்ட புராணத்தில் உமாபதி சிவம் ''அலகில் புகழ்பெறு இராசராசமன்னன் அபயகுல சேகரன்'' என்று கூறியிருப்பது குறிப்பிடத்தக்கது. நம்பியாண்டார் நம்பிகளின் அருட்சிறப்பைக் கேட்டு நாரையூர் நண்ணினான். அரசன் கொணர்ந்திருந்த நிவேதனப்பொருட்களையும் நம்பியின் வேண்டு கோளுக்கு இணங்கப் பொள்ளாப்பிள்ளையார் உண் டருள்புரிந்தார். ''அங்கொன்றும் இங்கொன்றுமாக உள்ள தேவாரப் பதிகங்கள் முழுமையாக உள்ள இடத்தைப் பொள்ளாப் பிள்ளையாரிடம் கேட்டுத் தெரிவிக்க வேண்டும்'' என்று மன்னன் கேட்டுக் கொள்ள பொள்ளாப் பிள்ளையாரிடம் கேட்டு நம்பி களும் தேவாரத்திருமுறைகள் தில்லை பொன்னம் பலத்தின் மேல்பால் ஓர் அறையில் இருப்பதை அறிந்து கூறினார்.

சோழமன்னன் அபயகுலசேகரன், நம்பியாண் டார் நம்பிகளை அழைத்துத் தில்லை சிற்றம்பலம் வந்தான். தில்லைவாழ் அந்தணர்களிடம் ''பொள்ளாப் பிள்ளையார்'' உணர்த்தியதைக் கூறி, தேவார ஆசிரியர் மூவரையும் எழுந்தருளச்செய்து திருமுறைகள் இருந்த திரு அறையைத் திறந்தனர். புற்று மூடியிருந்த திரு முறை ஏடுகளைக் கண்டு மனம்வாட ''இக்காலத்திற் குத் தேவையானவற்றை வைத்தோம்'' என எழுந்தது திருவருள் வாக்கு.

திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையார் இவ் வாறு நமக்குத் தோத்திரம் தந்த பிள்ளையாராக விளங்குகின்றார். பெரியார் கூறத் தம் கொம் பொன்றையே ஒடித்து மகாபாரதம் எழுதிய பிள்ளை யார், நம்பியாண்டார் வாயிலாக நமக்குத் திருமுறை கள் அருளிய அருளினை என்னென்று போற்றுவது!

**''வையகத்தார் ஏத்த மதில்நாரை யூர்மகிழ்ந்து**
**பொய்யகத்தார் உள்ளம் புகலொழிந்து -**
**கையகத்தோர்**
**மாங்கனிதன் கொம்பண்டம் பாசமழு**
**மல்குவித்தான்**
**ஆங்கனிநம் சிந்தை அமர் வான்''.**

திருநாரையூர் பொள்ளாப் பிள்ளையாரைத் தொழ தீராவினைகள் தீரும்; செல்வ வளங்கள் சேரும்; மெய்ஞ்ஞானக் கலைஞானம் ஓதாமலே மிகும். வையகத்தில் வாழ்வாங்கு வாழ பொள்ளாப் பிள்ளை யாரைத் தொழுது போற்றிடுவாமாக!

★★★

## அடுத்த இதழில்

**முனைவர் இரா. செல்வகணபதி அவர்களின் ''சைவமும் பெரிய புராணமும்'' தொடர் அடுத்த இதழில் வெளிவரும் எனத் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.**

# இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

## சுற்றறிக்கை எண். 71323/98/கே1/நாள். 13.8.98.

**அனுப்புநர்**

திருமிகு. ச. மெய்கண்டதேவன், இ.ஆ.ப.,
ஆணையாளர்
இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை,
சென்னை - 600 034.

**பெறுநர்**

அனைத்து இணை ஆணையர்கள்
அனைத்து இணை ஆணையர் / செயல் அலுவலர்கள்
அனைத்து துணை ஆணையர் / செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர் / செயல் அலுவலர்கள்
அனைத்து உதவி ஆணையர்கள்

**பொருள் :** இறைவர் - இறைவியர் திருவீதிப் புறப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களைப் பராமரித்துப் பாதுகாக்க அறிவுறுத்துவது - பற்றியது.

★★★

இறைவர் - இறைவியர் திருவீதிப் புறப்பாட்டிற்குத் திருக்கோயில்களில் பற்பல வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பூதவாகனம், கற்பக விருட்ச வாகனம், கைலாச வாகனம், ரிஷப வாகனம், யானை வாகனம், நந்தி வாகனம், கருட வாகனம், குதிரை வாகனம் போன்ற பற்பல வாகனங்களில் இறைவர் - இறைவியரைத் திருவீதிப் புறப்பாடு செய்வதில் தத்துவ நுட்பமான கருத்துகள் அடங்கியிருப்பதாக ஆன்றோர்கள் நமக்குத் தெளிவுறுத்தியுள்ளார்கள்.

நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் ஐம்பூதங்களுமானவன் இறைவனே என்பதை உணர்த்தும் வகையில் இறைவரைப் பூத வாகனத்தில் புறப்பாடு செய்கிறோம்.

இறைவன் நினைத்ததெல்லாம் தரக்கூடிய கற்பக மரம் போன்றவன் என்பதை உணர்த்தும் வகையில் கற்பக விருட்ச வாகனத்தில் புறப்பாடு செய்கிறோம்.

இறைவன் உறையுமிடம் திருக்கயிலாயம் என்பதால் கயிலாய வாகனத்தில் புறப்பாடு செய்கின்றோம்.

இறைவன் அறவடிவமானவன் என்பதால் ரிஷப வாகனத்திலும், ஆணவத்தை அடக்கி அருள் செய்பவன் என்பதால் யானை வாகனத்திலும், மனவேகத்தை அடக்கி ஆள்பவன் என்பதால் குதிரை வாகனத்திலும் புறப்பாடு செய்கின்றோம்.

இவ்வாறு இறைவர் - இறைவியர் திருவீதிப் புறப்பாட்டிற்குப் பயன்படுத்தப்படும் வாகனங்களில் தத்துவ நுட்பமான கருத்துகள் அடங்கியிருப்பன எண்ணி உணரத்தக்கனவாகும்.

திருவிழாக்களின்போது இன்றியமையாது பயன்படும் இத்தகைய வாகனங்களைப் பல திருக்கோயில்களில் போதிய பாதுகாப்பு இன்றி வெயிலில் காயும்படியும், மழையில் நனையும்படியும், அப்படி அப்படியே வெட்ட வெளியில் போதிய பராமரிப்பின்றி விட்டிருப்பது தற்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

உடன் திருக்கோயில் வாகனங்களைப் பாதுகாக்க கிழ்க்காணும் வகையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள திருக்கோயில் நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தப்படுகின்றது.

1. திருக்கோயில் வாகனங்களைப் பாதுகாக்க வாகன மண்டபம் இல்லாத திருக்கோயில்களில் உடனடியாக வாகனமண்டபம் கட்டப்படுதல் வேண்டும்.
2. உடனடியாக அவற்றைப் பாதுகாக்கத் தகரக் கொட்டகையாவது உடன் அமைக்கப்படுதல் வேண்டும்.
3. திருவிழா தொடங்குவதற்கு முன்னமே திருவீதிப் புறப்பாட்டிற்கு உகந்த நிலையில் வாகனங்கள் சரியான நிலையில் உள்ளனவா என்பதைச் சரிபார்க்க வேண்டும்.
4. வாகனங்கள் வண்ணம் பூசப்பட்டு நேர்த்தியாகப் பராமரிக்கப்படவேண்டும்.
5. வாகனங்கள் சில உறுப்புகள் பழுதுபட்டு திருவீதிப் புறப்பாட்டிற்கு உகந்ததாக இராவிடில் மரத் தச்சர்களைக்கொண்டு காலத்தில் செப்பனிட்டுச் சரி செய்து வைக்கவேண்டும்.

இத்தகைய அறிவுரைகளை நன்கு கடைப்பிடித்து திருவிழாக்களில் திருவீதிப் புறப்பாடு சீரோடும் சிறப்போடும் நடைபெறத் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள திருக்கோயில் செயல் அலுவலர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் அறிவுறுத்த இணை ஆணையாளர்கள் மற்றும் உதவி ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சுற்றறிக்கை கிடைக்கப்பெற்றதற்கான ஒப்புதலை உடன் அனுப்பி வைக்கக்கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

ச. மெய்கண்ட தேவன்,
ஆணையாளர்.

# கம்பனும் திருமுறைகளும்

கம்பன் கவிநயமணி வே. தியாகராசன்
டி. மாணிக்கவாசகர்

மதுரைக்கருகில் வாதவூரில் பிறந்து **வாதவூரார்** என அழைக்கப்பெற்று, அரிமர்த்தன பாண்டியனின் மந்திரியானவுடன் **தென்னவன் பிரமராயன்** எனப்பெயர்பெற்று, திருப்பெருந்துறை நாயகனான சிவபெருமான் எதிரிலே குற்றமற்ற சொல்லான மலரை எடுத்து, பக்தி எனும் அன்பான நாரிலே கோர்த்துக் கண்ணீர்விட்டு உருகிப்பாட இறைவன் மனமகிழ்ந்து **மாணிக்கவாசகர்** என அழைத்தார். மாணிக்கவாசகப் பெருமானின் வரலாறு கூறிய பரஞ்சோதி மாமுனிவர் இப்பெரியவரை **அழுது அடியடைந்த அன்பர்** எனப் பெயரிட்டு அழைத்து வணங்கி மகிழ்ந்தார்.

**யாளே பொய்: என் நெஞ்சம் பொய்: என் அன்பும்**
**பொய்:**
**ஆனால் வினையேன் அழுதால் உனைப்**
**பெறலாமே!**
**தேனே அமுதே! கரும்பின் தெளிவே! தித்திக்கும்**
**மானே! அருளாய்! அடியேன் உனை வந்துறுமாறே.**

என்றபடி

'தாயை நினைந்து அழும் குழந்தையைப் போல் அழுதால் உன்னையடைய முடியுமன்றோ?'' எனக் கேட்கிறார்.

இப்பெரியார் தமது நூலின் முதல் பாகமான சிவபுராணத்தை **நமச்சிவாய வாழ்க!** என்று ஐந்தெழுத்து மந்திரத்துடன் தொடங்குகிறார். அதில் **தாயிற் சிறந்ததயாவான தத்துவனே** என அழைக்கிறார் இறைவனை. படாதபாடு பட்டுக் குழந்தையை வளர்க்கும் தாய், தன் குழந்தை நேர்மையோ நெறியோ தவறிவிட்டால் வெறுத்துவிடுவாள். இறைவனோ ''இவன் கள்வன் கொடியவன் கீழ்மகன் என்னாதே என் மனத்தே கோயில் கொண்டானே! கள்வன் கடியவன் கலதியவன் என எண்ணாதே ஆட்கொண்ட கருணையை வியந்து தாயைக் காட்டிலும் பரிவுள்ளவன் இறைவன்; **பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப்** பரிவுடையவன் என்றார். கம்பனோ இறைவன் தாய் மட்டுமல்ல. அன்னை நீ அத்தன் நீயே அல்லவை எல்லாம் நீயே என வருணனின் வாக்கில் வைத்துப் பாடுகின்றார். **தாயினும் உயிர்க்கு நல்லான்** என குகன் அழைக்கப்படுகிறான்.

இறைவனை அடையக் கூடியவர்களின் மெய்ப்பாடுகளை கம்பர் பிரகலாதாரிடம் காட்டுகிறார். **ஓம் நமோ நாராயணாய என்று உரைத்து உளமுருகித் தானமைந்த இருத்தடக்கையும் தலையின் மேல் தாங்கி பூனிறக் கண்கள் புனலுற மயிர்ப்புறம் பொடிப்ப ஞான நாயகன்''** என்பது இறைவன் நாமம் கூறிய பிரகலாதனின் நிலை. இது வான்மீகர். ''எங்கெங்கு இராமநாமம் கூறப்படுகிறதோ அங்கங்கு சிரமேற் கரங்குவித்து, கண்களில் நீர்வார இருந்தான் அனுமான்'' எனக்கூறிய நிலையைக் காட்டுகிறது.

இறைவனைக் காணும் ஒவ்வொருவரையும் பற்றி இதே மாதிரி உணர்ச்சி மிகுந்த மெய்ப்பாடுகளைக் காட்டுகிறார்.

குகப்பெருமான் இராமபிரானைக் கண்டவுடன் உருகி மண்மீது விழுந்து வணங்கி உடல் வளைய வாய் புதைத்து நின்றார். **கண்ணனைக் கண்ணின் நோக்கி கனிந்தன இருண்டகுஞ்சி மண்ணுறப் பணிந்து மேனி வளைத்து வாய்புதைத்து நின்றான்** என்கிறார் கம்பர்.

அனுமான் இராமபிரானைக் காண்கிறார். கண்டவுடன் ''நம் துன்பங்களைப் போக்கி, மயக்கத்தால் உண்டான பாவங்களைநீக்கி, யமலோகம் சென்று துன்புறாமல் மீண்டும் பிறவாத நெறியான முத்தியளிக்கும் தேவர்கள் இவர்கள்! என் எலும்பு உருகுகின்றது. அளவில்லாத பக்தி உண்டாகின்றது இவர்கள் யார்? எனக்குத் தோன்றும் அன்புக்கு எல்லையே இல்லை!'' என்றார்.

**துன்பினைத் துடைத்து மாயத் தொல்வினை**
**தன்னை நீக்கி**
**தென்புலத்தன்றி மீளா நெறியுய்க்கும்**
**தேவரோதாம்!**
**என்பு எனக்கு உருகுகின்றது. இவர்கின்றது**
**அளவில் காதல்**
**அன்பினுக்கு அவதியில்லை. அடைவென்**
**கொல்? அறிதல் தேற்றேன்.**

இது அனுமானின் பக்தியுணர்ச்சி.

அனுமானை முன்னிட்டுக் கொண்டு சுக்ரீவன் இராமபிரானைக் காணவருகிறான். ''உலகம் புரிந்த புண்ணியம் பூராவும் ஒன்றாகத் திரண்டு இரண்டாகப் பிரிந்து இந்த இராம லட்சுமணர்களாக வந்து விட்டதோ?'' என எண்ணி, மேன்மேலும் அன்பு என்ற கடலில் மூழ்கி கரைஏறமுடியாமல், கண்கள் களிப் படைய இராமபிரானை அணுகினான். ''**இவர்கின்ற காதல் ஓத - கனைகடல் கரைநின்று ஏறக் கண்ணினை களிப்பநோக்கி அனகனைக் குறுகினான்** என்றார். இது சுக்ரீவனின் பக்தியுணர்ச்சி.

மின்மினிபோல் மறையும் பிறவியை வேரோடுகளைந்துவாழ இப்பெருமானின் திருவடி வணங்கும்பேறு பெற்றேன். **மின்மினி ஒளியின் மாயும் பிறவியை வேரின் வாங்க** - இவர் **சரணந்தாழ** வணங்க என்ன புண்ணியம் செய்தேனோ என உருகினான் விபீஷணன். சிரமேற்கரங் குவித்து **கரங்கள் மீச்சுமந்து செல்லும் கதிர்மணிமுடியன்** - என்றெல்லாம் கூறி '' இத்துடன் பிறவியொழிந்தது என்ற மனமகிழ்ச்சி முகத்தில்காட்ட கண்களில் நீர்வார தரையில் விழுந்து இராமபிரானை வணங்கினான். **அழிந்தது பிறவியெனும் அகத்தியல் முகத்தில் காட்ட வழிந்த கண்ணீரின் மார்பின் மண்ணுற வணங்கினான் ...** எனக்கம்பர் குறித்தருளினார். அடியார்கட்கு ஆண்டவனை நினைத்தாலோ கண்டாலோ ஏற்படக்கூடிய உணர்ச்சிமயமான எண்ணங்களையும் மெய்ப்பாடுகளையும் ஒரே பாட்டில் மணிவாசகப்பெருமான் ''உடலின் ஒருவிதஇன்பமான உணர்ச்சியால் உன் திருவடியை வணங்க என் சிரமேற் கரங்குவித்து, இருகண்களிலும் நீர்ததும்ப, உள்ளம் வெதும்பி, என்னிடமுள்ள பொய்யான உணர்ச்சிகள் நீங்கப்பெற்று உன்னை வணங்குவதை விடவே மாட்டேன். ஐயனே! என்னைக் கண்டு கொள்க என்று பாடியுள்ள பாடல் இங்கு நினையத்தக்கது.

**மெய்தானரும்பி விதிர்விதிர்த்து உன் விரையார்**
**கழற்கு என்**
**கைதான் தலைவைத்து கண்ணீர் ததும்பி உள்ளம்**
**பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சயசய**
**போற்றி என்னும்**
**கைதான் நெகிழவிடேன்! உடையாய் என்னைக்**
**கண்டுகொள்ளே**

- திருச்சதகம்!

இத்தனை விதமான உணர்ச்சி நிறைந்த மெய்ப்பாடுகளை கம்பர் பெருமான் இராமபிரானையடைந்த அனுமான், சுக்ரீவன், விபிஷணன் முதலியோரிடம் காட்டிய அழகு எத்துணை இன்பம் பயக்கின்றது.

இறைவனை யடையக் கூடிய உண்மை பக்தர்கள் மோட்சலோக இன்பத்தைக்கூட விரும்ப மாட்டார்கள். ''மேலுலகாகிய சுவர்க்கத்தில் இருந்தவர்கள் அத்தனை பேரும் இராமபிரான் அவதரிக்கக் கூடிய இலங்கையின் மனிதர்களாக - அடியார்களாக - பிறந்து ஒருவரை ஒருவர் பிரியாத அடியார்களின் கூட்டத்திலிருக்கும் இன்பத்தையும் இராமபிரான் என்ற தெய்வத்தையும் பிரியாமலிருக்க விரும்பி, கீழுலகில் அயோத்தியில் மனிதர்களாகப் பிறக்க விரும்பும் தன்மையுடையது புண்ணிய நகரமான அயோத்தி எனக் கம்பர் பெருமான் குறித்துப் போந்தார். **எவ்வுலகத்தோர் யாவரும் தவஞ் செய்து ஏறுவான் ஆதரிக்கின்ற அவ்வுல கத்தோர் இழிவதற்கு அருத்திபுரிகின்ற அயோத்தி மாநகரம்** என்பது கம்பர் வாக்கு.

இதே கருத்தை மணிவாசகப் பெருமான் ''எம் தலைவனே! இந்திரன் திருமால் இவர்களது வாழ்க்கை கொடுத்தாலும் ஏற்கமாட்டேன். என் குடியே அழிந்தாலும் உன் அடியாரின் நட்பையே விரும்புவேன். நரகமே புகுந்தாலும் உன் அடியாரின் நட்பு வேண்டும். உன்னைத் தவிரப் பிறதெய்வத்தையும் வணங்கேன்.

**கொள்ளேன் புரந்தரன் மால் அயன் வாழ்வு:**
**குடிகெடினும்**
**நள்ளேன் நின்னடியாரெல்லாம்: நரகம்**
**புகினும்**
**எள்ளேன்: திருவருளாலே 'இருக்கப்பெறின்.**
**இறைவா!**
**உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லாது எங்கள்**
**உத்தமனே**

- திருச்சதகம் 2

மணிவாசகருக்கும் கம்பருக்கும் தான் எவ்வளவு மன ஒற்றுமை என மகிழ்ச்சியடையத் தோன்றுகின்றது.

இராமபிரானும் சீதாபிராட்டியும் கங்கைக்கரையில் நடந்து வருகின்றனர். ஒருபெண் வலதுகால் பெருவிரலைப் பார்த்துக் கொண்டே நடக்க வேண்டும். வலப்புறம் ஆண் இடப்புறம் பெண் என அம்மையப்பரான இறைவனைக் கூறுதல் வழக்கம். வலது காலைப் பார்த்துக் கொண்டு நடந்தால் கணவனுடைய திருவடியை தரிசித்துக் கொண்டே நடப்பதாகக் குறிப்பு. இராமபிரான் கூட வருவதால் அவரது திருவடிகளையே தரிசித்துக் கொண்டே பிராட்டி நடந்தாள் என்கிறார். பக்கத்திலுள்ள தாமரைகளைக் கண்டு இராமபிரானது திருவடிகள் சிரித்தன என்கிறது கம்பன் வாக்கு. **கஞ்சகங்களை மஞ்சள் கழல் நகுகின்றது கண்டாள்** என்கிறான் கம்பன்.



**மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு, இந்துசமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமித் திருக்கோயில் விநாயகர் மற்றும் முருகவேலுக்குரிய 108 போற்றி நூல்களை வெளியிட்டார்கள்.**

---

**தாமரைகளைக் காட்டிலும் தான் அழகாக உள்ளோம் என இராமபிரானின் திருவடிகள் சிரித்தன என்றால் அது அப்பாதங்களுக்கு ஆணவம் இருப்பதாகப் பொருள்படும். மணிவாசகரின் திருக்கோத்தும்பியின் ஒருபாடல் இந்த ஐயத்தை நீக்குவதுடன் இராம பிரானின் திருவடிகளின் பெருமையை அதிகரித்துக் காட்டுகிறது. வண்டுகள் தாமரையில் உள்ள தேனைச் சாப்பிட்டுக்கொண்டிருக்கின்றன. சீக்கிரம் தீர்ந்துவிடக்கூடிய தேனை அருந்திக்கொண்டிருக்கும் வண்டுகளை நோக்கி இராமபிரானின் திருவடிகள் ''அந்தத் தாமரைகளில் உள்ள தேன் வெகுவிரைவில் தீர்ந்துவிடும். இந்தப் பாத தாமரையில்வந்து அமர்ந்தால் வற்றாத பேரின்பத் தேனையடையலாமே!'' என இராமபிரானுடைய பாத தாமரைகள் வண்டுகளின் அறியாமையை நினைத்து இரக்கம் கொண்டு சிரித்தன என்பது கம்பன் கருத்து.**

**இக்கருத்து மாணிக்கவாசகப் பெருமானின் திருவாசகத்தில் உள்ள திருக்கோத்தும்பியில் உள்ள கீழ்க்கண்டபாடலிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது எனத் தோன்றுகின்றதல்லவா!**

**தினைத்தினை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே**
**நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்**
**அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்**
**குனிப்புடை யானுக்கே சென்றூதாய் கோத்தும்பி!**

**- திருவாசகம் - திருக்கோத்தும்பி**

★ ★ ★

# கோடையைக் குளிரச் செய்த கோயில் நிழல்

- முனைவர் மா. வண்ணமுத்து
தமிழ்த்துறை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

தமிழக மக்களின் வாழ்வு பக்தி உணர்வோடு மிகுந்த தொடர்பு உடையதாகும். பண்டைத் தமிழக மக்கள் இறைவன் குடியிருக்கும் கோயிலோடு தங்கள் வாழ்க்கையை நெருக்கமாக இணைத்துக் கொண்டார்கள். மன்னர்களும், மக்கள் பணியை மகேசனுக்குச் செய்யும் பணியோடு இரண்டறக் கலக்கச் செய்து, தாங்களும் மகிழ்ந்து, மக்களையும் மகிழச் செய்தனர். இறைப் பணியைத் தமிழக மன்னர்கள் தலையாய பணியாகக் கொண்டமையால்தான், வானளாவிய கோபுரங்கள் அமைத்து, அவ்வக் காலங்களில் திருவிழாக்கள் பலவும் நடத்தி, மக்களின் ஒற்றுமைக்கு வழிவகுத்தனர். மக்கள் ஒன்றுகூடி மகிழ்வதற்குக் கோயில் சிறப்பான இடமாக அமைந்தது. கோயில் அமைப்பு முறைகளிலும், கோயில் கண்காணிப்பிலும் மன்னர்கள் தக்க கவனம் செலுத்தியமையால்தான், இன்றுவரை, பழைமையை அறிவுறுத்தும் சின்னங்களாகத் தமிழகக் கோயில்கள் விளங்கி வருகின்றன.

கோயிலுக்குச் சென்று, இறைவனை வழிபாடு செய்து, வாழ்வை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற உணர்வு, இன்று தமிழகத்தில் ஒரு புத்தொளியோடு சுடர்விடத் தொடங்கியுள்ளது இதற்குக் காரணம் தமிழக அரசின், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை மேற்கொண்ட முயற்சியேயாகும். மாண்புமிகு மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் அறநிலையத்துறை அமைச்சர் பொறுப்பையும், திருமிகு ச. மெய்கண்ட தேவன், இ.ஆ.ப; அவர்கள், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையாளர் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டதன் பின்பு, இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை, பக்தி உணர்வை மக்களிடையே பரவச்செய்வதில் தனிக்கவனம் செலுத்தத் தொடங்கியது. சைவ, வைணவத்திருக்கோயில்களில் அருளாளர்கள் பாடிய பாடல்கள் கல்வெட்டில் இடம் பெறச்செய்யப்பட்டன. திருக்கோயில்களில் தமிழில் வழிபாடு செய்வதற்கு ஆக்கபூர்வமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தக்கவர்களைக் கொண்டு, சைவ, வைணவக் கோயில்களில் ஒவ்வொரு வாரமும் சமயச் சொற்பொழிவு நடத்துவதற்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. அறநிலையத்துறை அதிகாரிகள், அலுவலர்கள் சைவ, வைணவக் கோட்பாடுகள் பற்றியும், நூல்கள் பற்றியும், நாயன்மார்கள், ஆழ்வார்கள் பற்றியும் அறிந்து கொள்வதற்குச் சான்றோர்களைக் கொண்டு, அவர்கட்குப் 'புத்தொளிப் பயிற்சி' வகுப்புகள் நடத்தப்பட்டன. இவ்வகுப்புகள் இவ்வாண்டு தொடக்கத்தில் நடைபெற்றன.

இச்செயல்கள் எல்லாம், இந்துசமய அறநிலையத்துறையின் வளர்ச்சிக்காக அத்துறை செய்த செயல்கள் எனலாம். இப்பணிகளுக்கு இடையே, இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை மேற்கொண்ட ஒரு சிறப்பான பணி இங்குக் குறிக்கத் தக்கதாகும். குறிப்பிடத் தக்க அப்பணி எதுவென்றால், கோடைக்காலத்தில் தமிழகப் பொதுமக்களும், மாணவர்களும் பயன்படும் படி, கோடைக்கால சைவ, வைணவ சமயப் பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு, இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை மேற்கொண்ட முயற்சிதான். அமைச்சர் மாண்புமிகு தமிழ்க்குடிமகன் அவர்கள் ஒப்புதலுடன், ஆணையாளர் திருமிகு ச. மெய்கண்ட தேவன், அவர்கள் திட்டமிட, இப்பயிற்சி வகுப்புகள் தமிழகம் எங்கும் 15.5.98-ஆம் நாள் தொடங்கியது. சைவ சமயப்பயிற்சி வகுப்புகள் சிவன் கோயிலிலும், வைணவ சமயப் பயிற்சி வகுப்புகள் திருமால் கோயிலிலும் நடைபெற்றன. பயிற்சி வகுப்புகள் 7 நாள் முதல் 10 நாள்கள் வரை நடைபெற்றன.

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை கூடலழகர் திருக்கோயில், சிவகங்கை சிவன்கோயில், காரைக்குடி கொப்புடைய நாயகி அம்மன் திருக்கோயில், திருவில்லிப்புத்தூர் ஆண்டாள் கோயில், கோவை அருள்மிகு பட்டீசுவரர் திருக்கோயில், கோவை சீனிவாசப் பெருமாள் கோயில், சென்னை அருள்மிகு கபாலீசுவரர் கோயில், சென்னை பார்த்தசாரதி கோயில், சேலம் அருள்மிகு சுகவனேசுவரர் கோயில், திருச்செங்கோடு அருள்மிகு அருத்த நாரீசுவரர் கோயில், சேலம் ராசிபுரம் அருள்மிகு பொன் வரதராசனார் திருக்கோயில், வேலூர், இரத்னகிரி அருள்மிகு பாலமுருகன் திருக்கோயில், சோளிங்கர் இலட்சுமி நரசிம்மர் திருக்கோயில் ஆகிய இடங்களில் பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றன. மேலும் தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி, மயிலாடுதுறை ஆகிய இணை ஆணையர் மண்டலங்களில் உள்ள திருக்கோயில்களிலும் இப்பயிற்சி வகுப்புகள் சிறப்பாக நடைபெற்றன.

சைவ, வைணவ சமயங்களை அடிப்படையாகக் கொண்டு பாடவேளைகள் அமைக்கப்பட

இப்பயிற்சி வகுப்புகள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெற்றன. தமிழகத்தின் தலைசிறந்த சைவ, வைணவப் பெரியோர்கள் பயிற்சி வகுப்பு களைச் சிறப்பாக நடத்தினர். இப்பயிற்சி வகுப்பில் மாணவர்களாக இடம் பெற்றவர்கள் 50 வயதைத் தாண்டிய பொதுமக்கள் என்பது குறிப்பிடத்தக்க தாகும். சைவ சமயப் பயிற்சியில் கலந்து கொண்ட பெண்கள் எண்ணிக்கையில் இருந்து வைணவ சமயப் பயிற்சி யில் கலந்து கொண்ட பெண்கள் எண்ணிக்கை அதிக மாக இருந்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

ஆங்காங்கே நடைபெற்ற பயிற்சி வகுப்பில் கலந்து கொண்ட அனுபவத்தால் என்னால் சில செய்தி களை அறிய முடிந்தது. இப்பயிற்சி வகுப்பில் கலந்து கொண்டவர்கள் பலர், மன அமைதியைப் பெற்றதாகக் குறிப்பிட்டனர். தாம் பெற்ற இறைச் சிந்தனை மனத் தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகச் சிலர் கூறினர். கோயில்கள் பற்றியும், கோயில் வழிபாடு பற்றியும், சைவ வைணவக் கோட்பாடுகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கு இப்பயிற்சி வகுப்பு தூண்டு கோலாய் அமைந்தது என்று எல்லோரும் குறிப்பிட்டு மகிழ்ந்தனர்.

பயிற்சி பெற்றவர்களின் அறிவு நுட்பத்தைச் சோதிப்பதற்குச் சைவத்திலும், வைணவத்திலும் தேர்வுகள் நடத்தப்பட்டு, நல்ல மதிப்பெண் பெற்றவர் களுக்கு ஆன்மீக நூல்கள் பரிசாக வழங்கப்பட்டன. நிறைவு நாளின் போது, கலந்து கொண்ட பயிற்சி யாளர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பொதுவாக இப்பயிற்சி வகுப்புகள் பொதுமக்கள் இயக்கமாகவே நடைபெற்றது என்று குறிப்பிடலாம். ராசிபுரத்தில் நடைபெற்ற நிறைவு விழாவின்போது, பயிற்சியாளர் அனைவரும் நகரின் முக்கிய தெருக் களில் பக்தி உலா வந்தது குறிப்பிடத் தகுந்ததாகும். இவ்விழா 23.6.98-ஆம் நாள் நடைபெற்றது அப்பகுதி மக்களிடையே ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது எனலாம்.

காரைக்குடியில் 21.6.98-ஆம் நாள் நடை பெற்ற சைவசமயப் பயிற்சி நிறைவு விழாவில், தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், காரைக்குடி அழகப்பா பல்கலைக் கழகத்துணை வேந்தர் திருமதி ருக்மணி அம்மையார் முதலியோர் கலந்து கொண்டனர். இங்கு நடைபெற்ற பயிற்சி வகுப்புப் பற்றி ஒரு செய்தியை அவசியம் குறிப்பிட வேண்டும். 125 பேர் கலந்து கொண்ட பயிற்சி வகுப் பில், அழகப்பா மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் 15 பேரும் அடங்குவர். இம்மாணவர்களுள், சேக்மீரான், முகமது அலி ஜின்னா ஆகிய இரண்டு முசுலீம் மாணவர்களும் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத் தகுந்ததாகும். இவர்களை இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொள்ள அனுமதி அளித்து அனுப்பியவர் வில்லியம் துரைராஜ் என்னும் கிருத்துவத் தலைமை யாசிரியர். சேக்மீரானும், முக்மது அலிஜின்னாவும் தேவார. திருவாசகங்களைப் பாடிப் பரவசம் அடைந் தனர். இருவரும் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் பெற்றுத் துணைவேந்தரிடம் பரிசும் பெற்றனர். தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார், அம்மாணவர்களின் ஆர்வத்தைப் பாராட்டி இருவருக் கும் தனித்தனியே ரூபாய் 100 பரிசு நல்கிப் போற்றினார்.

இவ்விழாவில் இன்னொரு சிறப்பு என்ன வென்றால், விழாவில் தலைமையாசிரியர் வில்லியம் துரைராஜ் அவர்கள் கலந்து கொண்டு, ''மனத்தைச் செம்மைப்படுத்தும் இத்தகு பயிற்சி வகுப்புகளை நடத்தும், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சரையும், ஆணையாளரையும் பாராட்டு கிறேன்,'' என்று கூறி இத்தகு வகுப்புகள் தொடர்ந்து நடைபெறவேண்டும் என்ற தமது வேண்டுகோளை யும் கூறினார். சாதி, சமயம், இனம் ஆகியவற்றிற்கு அப்பாற்பட்ட ஒரு மனநிலையை, இத்தகு பயிற்சி வகுப்புகளால் உருவாக்கி, நாட்டில் அமைதியை நிலவச் செய்யமுடியும் என்பதற்குக் காரைக்குடியில் நடைபெற்ற, கோடைக்கால சைவ சமயப் பயிற்சி நிறைவுவிழா நிகழ்ச்சி சான்றாக அமைகிறது எனலாம்.

கோடையைக் குளிரச்செய்த கோயில் நிழலில் நிகழ்ந்த சைவ, வைணவ சமயப் பயிற்சி வகுப்பு களைத் தமிழக அரசின் இந்து சமய அறநிலைய ஆட்சித்துறையினர், வாய்ப்புக் கிட்டும்பொழுது எல்லாம் தொடர்ந்து நடத்த வேண்டும். அவ்வாறு நடத்தும் பொழுது நாட்டில் நிலவும் போட்டி, பொறாமை, பூசல் ஆகியன ஒழியும். மனத்தைச் செம்மைப்படுத்தும் இறையருட் கல்வியை மக்கள் பெறுவதனால் வீட்டிலும், நாட்டிலும் இன்பமும், அமைதியும் தவழும் என்பது உறுதியாகும்.

★★★

# இராமானுசரின் சமுதாயப்பணிகளும் அறிவுரைகளும்

- பரந்தாம ராமானுசாச்சாரியார்

மதப்புரட்சி செய்த மகான் இராமானுசர் ஆற்றிய முக்கிய சமுதாயப் பணிகள் பின்வருமாறு:

1. மைசூர் ஹொய்ச்சள நாட்டுத் தலைநகர் தொண்டனூரில் தமது எண்பதாவது வயதில் எழுந்தருளி வாதுக்கு வந்த ஜைனர்களை வென்று திருமால் நெறிகளை விரிவாகவும் வலிவாகவும் வேகமாகவும் பரப்பினார்.

மக்கள் குடிநீர் வசதிக்காக '' மோதிதலாப்'' என்று தற்போது கூறும் நீர்த்தேக்கத்தைக் கட்டினார். நீர்ப் பாசனத்திற்காகவும் பயன்படுகிறது இந்த தொண்டனூர் ஏரி. இந்த ஏரி மக்களின் உடல் நீர் வேட்கையைத் தணிப்பது போல இராமானுஜரின் அருள் வெள்ளம் பல மக்களின் உயிர் (ஆத்ம) வேட்கையையும் தணிக்கிறது.

2. டில்லியிலிருந்து செல்லப்பிள்ளை விக்ர கத்தை மீட்டு வந்தபோது வழியில் உதவிய தீண்டா தாருக்குத் ''திருக்குலத்தார்'' என்று பெயரிட்டு, அவர்கள் திருக்கோயிலில் சென்று ''சம்பத் குமாரரை'' வணங்கி வழிபட ஆணையிட்டு ''அரிஜன ஆலயப் பிரவேசத்தை'' கி.பி. பதினோராம் நூற்றாண்டிலேயே நிறைவேற்றினார்.

3. தம் இளைமைக் காலத்திலேயே அந்தண ரல்லாத வைசிய குலத்தில் பிறந்த திருக்கச்சி நம்பிக ளுக்கு உணவளித்து எஞ்சிய உண வைத் தாம் உண்டு மகிழவிரும்பினார். அவரையே குருவாக அடையவும் விரும்பினார். காவிரியில் நீராடித் திரும்பும்போது அந்தணரல்லாத உறங்கா வில்லிதாசர் என்ற உத்தமத் திருமால் அடியார் தோள்மீது கைவைத்துத் தாங்கலாக நடந்துவந்தார். அரிஜன வகுப்பைச் சார்ந்த மாறனேரி நம்பியின் ராஜப்பிளவைச் கட்டிக்கு மருந்திட்டு உணவூட்டிய தமது குரு பெரிய நம்பி பெற்ற பேற்றைத் தான் பெற வில்லையே என்று ஏங்கினார். திருவேங்கடம் சென்றபோது வழிகாட்டிய ஏற்றம் இறைக்கும் எளிய உழவனை வணங்கினார். தயிர் தந்த பெண்மணிக்கு வைகுந்தம் தரும்படி பரிந்துரை செய்து திருவேங்கட னுக்குச் சீட்டு தந்தார். இதனால் சாதி மதமற்ற ஓர் சீர்திருத்தச் செம்மலாக விளங்கினார். ஊமை ஒரு வருக்குத் திருமந்திரம் உபதேசம் செய்தார்.

4. அதுநாள் வரையில் இரகசியமாகவும் மறைபொருளாகவும் இருந்த திருமந்திரத்தையும், அதன் பொருளையும் திருக்கோட்டியூர் விமான மண்டபத்தின்மீது நின்று ஆசையுடைய அனைவர்க்கும் வழங்கி அவர்கள் அனைவரும் பரமபதம் எய்த வழி வகுத்தார். குருவின் ஆணையை மீறிய இச் செயலுக்காகத் தான் நரகம் புகவும் தயாராகி தியாகியானார். மற்றும் ஆசையுடைய அனைவர்க்கும் வழங்கும்படி அந்தணர்களுக்கு ஆணையிட்டு காரேய் கருணை இராமானுஜரானார். ''ஆசையுடையோர்க் கெல்லாம் ஆரியர்காள்! கூறுமென்று பேசி வரம் பறுத்தார் பின்.'' (உபதேச ரத்தின மாலை).

5. திருவரங்கம் கோயில் வழிமுறைகளை மாற்றி அமைத்து அங்கு மண்டபங்கள், மலர்ச் சோலைகள், நூல் நிலையங்கள் அனைத்தும் அமைத்து மக்கள் நல்வாழ்வுக்கு எடுத்துக்காட்டாக நல்வழி வகுத்தார்.

6. கங்கையில் தம்மைக்கொல்ல முயன்ற குருவான யாதவப் பிரகாசரையே தமது சீடராக ஏற்று, அருள் பெருங்கொண்டலாகத் (காரேய் கருணை) திகழ்ந்தார்.

7. வாதப் போரில் தோற்ற ''யக்ஞமூர்த்தி'' யைத் தனது சீடராக ஏற்று பின்னர் அவரை பாகவதர் பலருக்குக் குருவாக்கினார்.

8. ஆழ்வார்கள் ஈரத்தமிழில் மதிநலத்துடன் திருவாய் மலர்ந்த அருளிச் செயல்களுக்கு ஏற்றமளித்து, கோயில் கருவறையிலும், திருமால் வீதி புறப்பாட்டில் முன்பாகவும் ஓதிச் செல்லும்படிச் செய்தார். இதனால் தமிழ் வளர்ந்தது. இதனையே ''ஆழ்வார்கள் ஏற்றம்'', ''அருளிச் செயல் ஏற்றம்'' ''ஆழ்வார்கள் வாழி! அருளிச் செயல் வாழி'' எனப் பாராட்டியுள்ளார் மணவாள மாமுனிகள். தமிழ்ப் பாசுரங் களில் அர்ச்சனை (வழிபாடு) என்று அன்றே ஏற்படுத்திய பெருமை இவருக்குண்டு.

9. திருமால் நெறி வளர்க்க 74 (ஏழுபத்தி நான்கு) சிம்மாசனபதிகளை நியமித்தார்.

10. ஆண்டாள் திருமாலிருஞ்சோலை பெருமாளுக்கு 100 பானை இனிப்புப்பொங்கலும் 100

தடா வெண்ணையும் தருவதாக வாய்ச் சொல்லாய் வேண்டிக் கொண்டதை செயலில் நிறைவேற்றினார்.

## இராமாநுஜர் அருளிய ஆறு அறிவுரைகள்

1. ஆழ்வார்கள் திருவாய் மலர்ந்த ஈரத்தமிழ் அருளிச் செயல்களாகிய நாலாயிரத் திவ்யப் பிரபந்தப் பாசுரங்களைப் படித்து ஓத வேண்டும். மற்றவர்களும் படித்து ஓதச் செய்யவேண்டும்.
2. திருமால் நூற்றெட்டு திருப்பதிகளில் எழுந்தருளியுள்ள எம்பெருமான்கள் கோயில் வழிபாட்டுக்கு உதவி, வழிபாடு செவ்வனே குறைவற நடத்தவேண்டும்.
3. மைசூர் மாநிலத்தில் உள்ள மேல்கோட்டை என வழங்கும் திருநாராயணபுரத்தில் ஒரு குடிசையாகிலும் கட்டிக் கொண்டு அங்கு தங்கியிருந்து தினமும் சம்பத் குமாரராகிய திருநாராயணப் பெருமாளை வணங்கி வழிபடவேண்டும்.
4. திருமால் திருமகளுக்கு முதன் முதல் உபதேசித்த கீழ்க்கண்ட துவயமந்திரத்தையும் அதன் பொருளையும் ஆசாரியன் மூலமாகப் பெற்று தினமும் ஓதிப் பயன்பெறவேண்டும்.

***''ஸ்ரீமந்நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே,***

***ஸ்ரீமதே நாராயணாய நம:''***

5. திருமாலாடியவர் ஒருவரை நண்பராகவும், துணைவராகவும் பெறறு அவருடன் சேர்ந்து திருமால் நெறிகளைப் பின்பற்றி வாழ்தல்.
6. ஸ்ரீபாஷ்யத்தைப் படித்தும், மற்றவர்கள் படிக்கும் படியும் செய்யவேண்டும்.

இத்துடன் திருமாலுக்கும் திருமாலடியவர்களுக்கும் தொண்டு செய்ய வேண்டும். திருமால் அடியார்களிடையே சாதி, கல்வி, ஒழுக்க வேறுபாடு காட்டக்கூடாது. திருமாலுக்கு அடிமை என்பதொன்றையே கருதவேண்டும். ஆத்மா மற்றும் உடலால் துன்பப்படும் மக்களுக்கு ஐயோ என்று இரங்கி கருணை காட்டி அவர்கள் உடல் துன்பத்தையும் உள்ளத் துயரத்தையும் போக்கி தொண்டனாக வாழ வேண்டும் என்றும் அறிவுரைகள் வழங்கினார்.

## எம்பெருமானார் ஏரி

திருமாலாகிய பெருங்கடலிலுள்ள திருமாலின் கருணையாகிய நீரை; நம்மாழ்வாராகிய காளமேகம் பருகி நாதமுனியாகிய மலைமீது பொழிய; உய்யக் கொண்டார். மணக்கால் நம்பிகளாகிய அருவிகளின் வழியே ஓடி; ஆளவந்தாராகிய பேராற்றில் சென்று சேர்ந்து; அங்கிருந்து ஏம்பெருமானாராகிய ஏரியிலேயே வந்து தேங்கியது. அங்கிருந்து எழுபத்து நான்கு சிம்மாசனாபதிகளாகிய மதகுகளின் வழியே புறப்பட்டு கூரத்தாழ்வான் முதலியாண்டான், பட்டர் போன்ற சிஷ்யர்களாகிய வாய்க்கால்களின் வழியே ஓடி; சமுதாயமாகிய வயல்களில் பாய்ந்து; மக்களாகிய பயிர்களுக்குப் பாய்கின்றது. திருமாலின் கருணையாகிய நீரை உண்ட பயிர்களாகிய மக்கள் நல்ல பண்புகளுடன் ஓங்கி வளர்ந்து ஸ்ரீ வைஷ்ணவமாகிய, சீரார் செந்நெல் விளைவித்தனர். இவ்வாறு இராமாநுஜ ஏரி திருமால் நெறியாகிய பயிரை நன்கு வளர்த்து நல்ல பயனை நல்கியது.

இராமாநுஜரின் ஒப்பற்ற சீரிய தொண்டு வாழ்க்கையும், ஒழுக்கமும் சமுதாயத் தில் பெரும் மாற்றத்தையும், புரட்சியையும் ஏற்படுத்தியது. புரையோடிக் கிடந்த பல வேண்டாத பழியைக் கடத்தும் இராமாநுஜராகவும்; வேதப் பசுந்தமிழ் தன்னை தன் பக்தி என்னும் வீட்டின்கண் வைத்த வராகவும்: அறம் செப்பும் அண்ணலாகவும்; நல்லார் பரவும் நல்லவராகவும்; அடியார் குலாவும் அமுதமாகவும்; குணமும் கருணையும் உடைய மேகமாகவும், அருமுனிவர் தொழும் தவத்தோனாகவும்; மனதில் ஈனம் கடிந்த ஏந்தலாகவும்; கீதையின் செம்மைப் பொருளையும் உண்மை நன்ஞானத்தை உலகோர்க்கு உரைத்தவராகவும்; வல்வினைகளை வேரொடு வெட்டிக் களைந்த ஞான வீரராகவும்; இவ்வுலகில் மெய்யைப் பாதுகாத்த வேலியாகவும்; அனைவரும் வீடு பேறு அடைய வழிவகுத்தவராகவும்; ஞானியரும் வேதியரும், நல்லொழுக்கச் சீலரும் போற்றும் பெரியோராகவும் விளங்கிய சான்றோர் இராமாநுஜரின் புகழ் நம்மால் போற்றித் தலைக்கட்ட இயலாது.

இத்தகைய இராமாநுஜரின் வாழ்க்கை வரலாறுகளை நன்கு படித்துணர்ந்து, நமது வாழ்வில் கடைப்பிடித்து, நாமும் நலம் பலபெற்று, நம் நாடு திருநாடாகத் திகழ முயல்வோமாக. நாற்றிசையும் கொண்டாடும் சித்திரையில் திருவாதிரை நாளினை நாமும் கொண்டாடி பெருநாடு புகுவோமாக. இராமாநுஜர் தோன்றிய ''செங்கயல் வாவிகள் சூழ் வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர், சீமான்இளையாழ்வார் வந்தருளிய நாள் திருவாதிரை நாளே''.

**''ஏழ்பாரும் உய்ய எதிராஜர் உதித்தருளும்''.**
**சித்திரையில் செய்ய திருவாதி'' என்று**
**மணவாள**
**மாமுனிகள் சிறப்பித்துப் பாடியுள்ளார்.**

**''வாழியெதிராசன் வாழியெதிராசன்**
**வாழியெதிராஜ னென வாழ்த்துவார் -**
**வாழியென**
**வாழ்த்துவார் வாழியென வாழ்த்துவார்**
**தாளிணையில்**
**தாழ்த்துவார் விண்ணோர் தலை''**
***( ஆர்த்திப்ப்ரபந்தம்)***

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

# மறைஞான சம்பந்தர்

''சித்தாந்த சரபம்'' பேராசிரியர் டாக்டர் வை. இரத்தினசபாபதி

## முன்னுரை

மனித வள மேம்பாட்டுத் துறை என்ற ஒன்று இன்று அதிகம் பேசப்பெறுகிறது.

மனித சமுதாயமாயினும் சரி அல்லது அதன் வலிமையாயினும் சரி, அது வளம்பெற வேண்டு மென்றால் ஒருவகை இரட்டை நெறியை அடித்தள மாகக்கொள்ள வேண்டும்.

நெறியும் துறையுமே அந்த இரட்டைநெறி என்பது கொள்கை; துறை என்பது செயற்படும் முறை. கொள்கை இல்லாத செயற்பாடு குருட்டுத்தனமானது. செயற்பாடு இல்லாத கொள்கை முடத்தனமானது.

மனிதவள மேம்பாடு என்பது வெற்று உடல் முன்னேற்றமன்று; ஆன்ம இயல் முன்னேற்றமே;

ஆன்ம இயலானது வளம்பெற்று, முன்னேற் றம் பெற்று, அது சமுதாய மேம்பாட்டுக்குத் துணை புரிந்து சமுதாயம் மேன்மை பெற்றுச் சிறப்பதே உண்மையான மனித வள மேம்பாடு.

மனித வள மேம்பாடு என்ற நீண்ட தொடரை ஒரே சொல்லால் 'சமயம்' என்று குறித்து வாழ்வியல் முன்னேற்றம் கண்டவர் தமிழர்களே.

சமயம் என்ற சொல் சமைதல் - பக்குவப் படுதல் என்ற அடிப்படையில் அமைந்த வாழ் வியற்சொல்.

வாழ்வியல் பக்குவம் அடைவதற்குக் கொள் கையும் வேண்டும்; செயற்பாடும வேண்டும். சைவம் என்பதை ஒரு சமயம் என்ற வகையில் உணர்வது ஒருமுறை. சைவம் என்பதை வாழ்விற்குரிய குறிக் கோள் இறுதிப்படி என உணர்த்துவதே உண்மை நிலை.

வளமான வாழ்வியலின் இறுதிப்படி அனுப வம் எனப்பெறும். சைவத்தின் இரு பக்கங்களே கொள்கையும் செயற்பாடும்.

கொள்கையே சாத்திரம்; செயற்பாட்டு முறையே தோத்திரம்.

ஒரு தாளின் இருபக்கங்கள் போல ஒரு நாணயத்தின் இருபக்கங்கள்போல அமைந்தவைகளே தோத்திரமும் சாத்திரமும்.

''தோத்திரமும் சாத்திரமும் ஆனார்தாமே'' என்றார் வாழ்வியல் முதுமை அருள் வளம்பெறு சான் றோராகிய அப்பரடிகள்.

## சமய - சந்தான ஆசாரியர்கள்

தமிழகத்தைப் பொறுத்தவரையில் வாழ் வியல் வளமார் பெருநெறியாக உணரப்பெறுவது சைவ சித்தாந்தமே.

சிவன் என்னும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மானாகிய பரம்பொருளை அடைந்து, உணர்ந்து, அணைந்து நிற்றலே மனிதஉயிர் மேம் பாட்டுப் பெருநெறி.

சைவசித்தாந்தக் கொள்கைகளைத் துறைப் படுத்திக் கொடுத்தவர்கள் - அனுபவ வழிபடுத்திக் கொடுத்தவர்கள் - அனுபவித்தும், தம் அனுபவத்தைப் பிறர்க்கு வழங்கியும் வழிப்படுத்தியவர்கள் சமயா சாரியர்கள். அவர்களே சமயகுரவர்கள்.

சைவ சித்தாந்தப் பெருநெறியை - கொள்கை களை முறைப்படுத்திக் கொடுத்தவர்கள் சந்தான ஆசாரியர்கள்.

சமயாசிரியர்களாலும் சந்தான ஆசாரியர் களாலும் முறையாகத் துறைப்படுத்தப்பெற்றும் நெறிப்படுத்தப்பெற்றும் மலர்ந்திருப்பதே சைவசித் தாந்தப் பெருநெறி.

சமயாசிரியார்கள் நால்வர்கள் என நின்றாற் போலவே சந்தானசாரியர்களும் நால்வரே.

## அக - புற சந்தானங்கள்

சைவ சித்தாந்தப் பெருநெறிக்கென அமைந்த சந்தானத்தை (கொள்கை வழி) இரண்டு வகையாகப் பிரிப்பது மரபு.

அகச்சந்தானம்; புறச்சந்தானம்.

அகச்சந்தானம் திருக்கயிலையில்

சிவபெருமான் திருமுன்னிலையில் திகழும் பெருமை யுடையது.

புறச்சந்தானம் நிலவுலகில் சிவபெருமானின் திருவருள் முன்னிலையில் திகழ்ந்து விளங்கும் பெருமையுடையது.

திருக்கயிலையில் திகழும் அகச்சந்தான குரவர்கள் நால்வர். **நந்தியெம்பெருமான்.** அவர்தம் சீடர்கள் பலராயினும் சைவசித்தாந்தப் பெருநெறியை வளர்ப்பதற்குரிய முதற்பெருஞ்சீடராக அமைந்தவர் **சனற்குமாரர்.** அவர்தம் வழிவந்தவர் **சத்தியஞான தரிசனிகள்.** சத்திய ஞான தரிசனிகளின மாணக்கர் **பரஞ்சோதியார்.**

இந்நால்வரும் அகச்சந்தான குரவர் எனப் பெற்றவர்.

## மெய்கண்டார்.

திருக்கயிலையில் உள்ள பரஞ்சோதியார் நிலவுலகில் வாழ்ந்த மெய்கண்டாரை முதன்மைச் சீடராக்கிச் சைவசித்தாந்த மெய்ப்பொருளை உணர்த் தினார். அதனால் மெய்கண்டாரே புறச்சந்தானத்தில் முதற் குரவராயினார்.

திருக்கயிலாய பரம்பரை என்னும் மெய் கண்டாரே புறச்சந்தான முதற்குரவர் என்றும் கூறப் பெறுவதன் காரணத்தை இவ்வகையில் மக்கள் புரிந்து கொள்ளவேண்டும்.

குலமுறை கிளத்தல் என்பது ஒருவகையில் நீண்ட மரபுப் பின்னணி. சில தத்துவக் கொள்கை களுக்கு இத்தகைய மரபுப் பின்னணி இல்லை; கூறப் பெறவில்லை என்பதற்காக வருத்தப்படக்கூடாது. அதற்காகக் குலமுறை கிளத்தலைக் குற்றம் சொல்வது அடாப்பழிதரும் அகந்தைச் செயல்.

ஈராண்டிற் சிவஞானம் பெற்றுயர்ந்த திரு வருள் மெய்ஞ்ஞானியே மெய்கண்டார். அவருக்கு அவருடைய பெற்றோர்கள் வைத்த பிள்ளைத் திருப்பெயர் ''சுவேதவனப் பெருமாள்'' என்பதே. மெய்கண்டார் என்பது அவருடைய ஆசாரியராகிய பரஞ்சோதியார் அமைத்த பெயர்.

மெய்கண்டார் தாம் தம் குருவாகிய பரஞ் சோதியார் உபதேசித்த தத்துவக் கொள்கைகளை அனுபவத்தால் உணர்ந்து மக்கள் நலம் கருதி , 'சிவ ஞானபோதம்' என்ற நூலாக அமைத்துத் தந்த தோடன்றி, தாமே ஆசாரியனாகி நின்று மாணாக்கர் பலருக்கும் பாடம் போதித்து வந்தார் என்பது வரலாறு. இந்த வரலாற்று நிகழ்வு கி.பி 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்வுற்றது.

மெய்கண்டாரின் மாணாக்கர்கள் (49) நாற்பத் தொன்பதின்மர் என்பது மரபு.

மெய்கண்டாரின் தலைமை மாணாக்கர் சக லாகம பண்டிதர் எனப்பெறும் அருள்நந்தி சிவா சாரியார். இவர் சிவஞானசித்தியார், இருபா இருப்து, என்ற இரண்டு சாத்திர நூல்களையும் அருளிச் செய்தவர்.

அருணந்தி சிவாசாரியாரின் மாணாக்கர் மறைஞானசம்பந்தர். அவர்தம் மாணாக்கர் உமாபதி சிவாச்சாரியார்.

இவ்வகையில் திருக்கயிலாய பரம்பரையின் புறச்சந்தானம் நான்கு அருளாளர்களை உள்ளடக் கிய மரபாக- சைவசித்தாந்தப் பெருநெறியின் தத்துவ வெளிப்பாடாக மலர்ந்தது.

திருக்கயிலாய பரம்பரையின் புறச்சந்தான குரவர்கள் நால்வர். அவர்கள் முறையே மெய்கண் டார், அருணந்தி சிவாசாரியார், மறை ஞான சம்பந்தர், உமாபதி சிவாசாரியார் எனப்பெறுவர்.

24.8.98 ஆவணித் திங்கள் உத்தர நன்னாளில் முத்திப்பேறு எய்தியதை உளங்கொண்டு அன்னாரைப் போற்றும் வகையில் இக்கட்டுரை அமைக்கப் பெற்றுள்ளது.

## மறைஞான சம்பந்தர் வரலாறு

பெரும்புலவராகவும், புலவர்களால் மதிக்கற் பாடு உடையவராகவும் விளங்கிய மு.அருணாசலம் பிள்ளையவர்கள் எழுத்தைப் பின்பற்றியே இப்பகுதி எழுதப்பெறுகிறது.

மறைஞான சம்பந்தரின் காலம் கி.பி. 1300 ஐ ஒட்டியதாகக் கொள்வது மரபு.

மறைஞான சம்பந்தர். அருணந்தி சிவாசாரி யாரின் நேர்முக மாணாக்கர் என்று கொள்கிறார். திரு.மு.அ. அவர்கள். இதற்குரிய சான்றாக எதையும் எடுத்துக்காட்டி நிறுவியதாகத் தெரியவில்லை.

ஆனால் இன்று நாம் செய்த தவத்தால் நம் மிடையே நின்று வாழும் சைவசித்தாந்தப் பேராசிரியர் அருணையார் அவர்கள் இதே கருத்துடையவர் என்ப தையும் அறியமுடிகிறது.

மேலே குறிப்பிடப் பெற்ற அனைவரும் இத் தகைய மரபு முறையைக் கொள்வதற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு.

மெய்கண்டார் அதீதநிலையில் நின்று, திரு முறை அனுபவம் எனப்பெறும் திருவருளனுபவத் தில் திகழ்ந்தவர் என்பது அவர்தம் வரலாற்றால் தெரியலாகும் உண்மை.

திருமுறை நெறிசார் சைவப் பெரும் பேரனுபவத்தில் ஆகமநெறி அனுபவம் வந்து கலக்கிற வகையில் அருள்நந்தி சிவம் மாணாக்கராம் பேறு பெறுகிறார்.

திருமுறையும் ஆகமமும் இணைந்த பிறகு வேதக்கலையும் இணையும் வகையில் மறை ஞான சம்பந்தர் அப்பேறுபெறுகிறார். பின்னர் தில்லைக் கூத்தப் பெருமான் திருவருளனுபவமும் இணையவே உமாபதி சிவம் சீடராகிறார் என்ற ஒருவகைப் பொதுமைநெறி இணைப்பை எடுத்து நிறுத்தவே இச்சந்தானமரபு அமைக்கப்பெறுகிறது என்பதையும் ஒருவாற்றால் உணரலாம்.

மறைஞானசம்பந்தர் அவருக்குத் தீட்சா நாமமாக அமைந்திருத்தல் வேண்டும். இயற்கைப் பெயர் என்ன என்பது தெரியவில்லை.

மறைஞான சம்பந்தர் மெய்கண்டாரின் பிறப்புத் தலமாகிய பெண்ணாகடத்தில் பிறந்து வாழ்ந்தவர்.

பராசர கோத்திரத்தில் வந்தவர். சாம வேதம் பயின்ற பிராமண மரபில் வந்தவர்.

'' வேதம் ஆகமம் முதலான வைதிக நூல்கள் எல்லாவற்றையும் இவர் முறையாக ஓதி உணர்ந்து பெரும் பண்டிதரானமையால் மறைஞானசம்பந்தர் எனப் பெற்றார் போலும்''

உரிய காலத்தில் இவர் திருத்துறையூர் அரு ணந்தி சிவாசாரியாரை அடைந்து அவரை ஞான சாரியராகக் கொண்டார்.

அருணந்த சிவாசாரியார் மறைஞானசம்பந்த ருக்கு ஞான உபதேசம் செய்து மெய்கண்டார் நூலையும் தம்முடைய நூல்களையும் தந்து சந்தானத்தை வளர்த்து வரும்படிக் கட்டளையிட்டார் என்பார். அமரர் திரு.மு.அருணாசலம் பிள்ளை அவர்கள்.

அருள்நந்தி சிவாசாரியார் காலத்துக்குப் பின்னர் இவர் சிதம்பரத்திற்கு வடகிழக்கிலுள்ள திருக்களாஞ்சேரி என்னுமிடத்தில் இருந்துகொண்டு, தினமும் கூத்தப்பெருமானைச் சென்று வணங்கி வருவதைப் பழக்கமாகக் கொண்டுவந்தார்.

## உமாபதி சிவத்தை ஆட்கொண்ட முறை

சிதம்பரத்தில் ஒருநாள் தில்லைவாழ் அந் தணருள் ஒருவராகிய உமாபதி சிவாசாரியார் தம் முடைய முறையின்படி, நடராசப் பெருமானைப் பூசித்துவிட்டு, மரபுப்படி, சிவிகை யூர்ந்து செல்கிறார். முன்னால் ஒருவர் தீவர்த்தி ஏந்திச் செல்கிறார். இதைப்பார்த்த மறைஞானசம்பந்தர்.

''பட்டமரத்தில் பகற்குருடு போகிறது பார்'' எனக் கூறினார். அதுவே உமாபதியாருக்கு உப தேசமொழியாக அமைந்தது. உடனே உமாபதியார் சிவிகையை விட்டுக் குதித்து, மறைஞான சம்பந்தர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கித் தம்மை ஆட் கொள்ளும்படி வேண்டினார். அவரோ ஏதும் பேசா மலே நடந்தார். உமாபதியாரும் அவர் பின்னாலேயே சென்று கொண்டிருந்தார்.

மாலை வந்தது. இரவும் வந்துகழிந்தது. இப்படிப் பல நாள் சென்றன. ஒருநாள் காலை, தெருவில் நெசவுக்குரிய பாவு தோய்பவர்கள், பாவுக்கு (நூலுக்கு)க் கஞ்சி போட்டுக் கொண்டிருந்தார்கள். அக்கஞ்சி ஒழுகும்போது மறைஞானசம்பந்தர் அத னைத் தம் கைகளால் ஏற்று, 'சிவப்பிரசாதம்' எனக் கூறி அருந்தினார்.

மறைஞானசம்பந்தர் கைகளிலிருந்து ஒழுகும் கஞ்சியை, 'குருப்பிரசாதம்' எனக்கூறி உமாபதியார் அருந்தினார்.

உமாபதி சிவாசாரியாரின் பக்குவ நிலை யினை உணர்ந்த மறைஞானசம்பந்தர் அவருக்கு உபதேசம் செய்து வாழ்ந்தார் என்பது மரபு வழியாகக் கூறப்பெறும் வரலாறு.

## சதமணிக்கோவை

மறைஞானசம்பந்தர் நூல் ஏதும் செய்ய வில்லை என்பதே மரபுவழியாக ஆன்றோர் அனை வரும் கூறும் வழக்கு. இதை உணர்த்தும் வகையில், உமாபதி சிவாசாரியார் தாம் முதன்முதல் அருளிய 'சிவப்பிரகாசம்' என்னும் நூலில்

''தெரித்த குரு முதல்வர் உயர் சிவஞான
போதம்
செப்பினர், பின்பு அவர் புதல்வர்
சிவஞானசித்தி
விரித்தனர் மற்றும் அவர்கள் திருவடிகள்
போற்றி
விளம்பிய நூல் அவையிரண்டும் விரும்பி
நோக்கிக்
கருத்தில் உறை திருவருளும் இறைவன் நூலும்
கலந்த பொது உண்மை எனக்கருதி யானும்
அருத்திமிக உரைப்பன் வளர் விருத்தம் நூலும்
ஆசில் சிவப்பிரகாசம் ஆகும் என்றே''

என்ற பதினொன்றாம் பாடலில், தாம் எழுதிய நூலுக்கு உரிய - சிவப்பிரகாசம் செய்வதற்குரிய மூல நூல்களைக் குறிப்பிடுகிறார் உமாபதியார்.

சிவஞானபோதத்தையும் சிவஞான சித்தி யாரையும் மூலங்களாகக் கொண்ட உமாபதியார் தம் முடைய ஞானாசாரியராகிய மறைஞானசம்பந்தர் நூல் செய்திருப்பின், அது சதமணிக்கோவை என்பதாக அமைந்திருப்பின், அதனை எடுத்துக் கூறாமல் இரார்.

ஆனால் அமரர் மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் மறைஞானசம்பந்தர் நூல் செய்யவில்லை என்று கூறுவது தவறு, அவர் செய்த நூல் ''சத மணிக்கோவை'' என்று எழுதுகிறார். அவரைத் தவிர வேறு யாரும் இக்கருத்தைக் கூறவில்லை என்பது தெளிவு.

''சதமணிக் கோவை'' என்ற சாத்திர நூல் ஒன்று உண்டு. அதனை இயற்றியவர் பெயர் தெரிய வில்லை.

**சைவசமய நெறி**

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் 1955 ஆகஸ்டில் எட்டாம் பதிப்பாக வெளியிடப்பெற்ற சைவசமய நெறி என்னும் நூல் மறைஞானசம்பந்தரால் இயற்றப் பெற்றது.

பதிப்பாசிரியராகிய ஆறுமுக நாவலர் அவர்கள் ஆசிரியர் வரலாறாக ஏதும் எழுதவில்லை. ஒருவேளை முதற் பதிப்பில் எழுதியிருக்கலாம். அது கிடைக்கவில்லை.

சைவசமய நெறியின் ஆசிரியர் மறைஞான சம்பந்தர் என்பவர் பிற்காலத்து வந்தவராக இருக்க லாம். சந்தானாசாரியருள் ஒருவராகிய மறைஞான சம்பந்தரே இந்நூலை இயற்றினார் என்று சொல்வ தற்குரிய தக்க சான்றுகள் கிடைக்கவில்லை.

ஆயினும், சைவப் பெருமக்கள் படித்துணர வேண்டிய அருமையான நூல். சைவசமயம் சார்ந்தோர் என்னென்ன நெறிமுறைகளை நாள் தோறும் கடைப் பிடித்து ஒழுக வேண்டும் என்பதை வரையறை செய்து குறள் வெண்பாக்களின் மூலம் கூறும் அழகிய நூல்.

முடிவாக, மறைஞானசம்பந்தர் நூல் ஏதும் செய்யவில்லை எனக் கொள்வதே வலிமைவாய்ந்த கொள்கை எனக் கொள்ளலாம்.

நூல் எழுதாமை கொண்டு அதனை ஓர் இழுக்கு எனக் கொள்ள வேண்டிய கட்டாயம் இல்லை.

**குருதுதி**

உமாபதி சிவாசாரியார் தம்முடைய குருநாத ரைப்பற்றிப் பாடிய குருதுதியை எழுதி இதனை நிறைவு செய்கிறேன்.

''பார் திகழ வளர் சாம வேதம் மல்கப்
பராசரமா முனிமரபு பயில ஞானச்
சார்பு தர வந்தருளி எம்மை ஆண்ட
சைவசிகாமணி மருதத் தலைவன் அந்தண்
கார்மருவு பொழில்புடை சூழ் மதில்மீதே
மதியம்
கடவாமை நெடுங்கொடியின் கரம் தகையும்
கடந்தைச்
சீர் நிலவு மறை ஞானசம்பந்தன் எந்தை
திருவளரும் மலரடிகள் சென்னி வைப்பாம்.

*சிவப்பிரகாசம் - 6*

★★★

# வினாவும் விடையும்

திருக்கோயில் அன்பர்கள் வினவியுள்ள வினாக்களுக்கு ''சித்தாந்த சரபம்'' **பேராசிரியர் முனைவர் வை. இரத்தின சபாபதி** அவர்கள் விடை வழங்கி உள்ளார்கள். அவற்றைப் படித்து மகிழ வேண்டுகின்றோம்.

**வினா: திருக்கோயில்களில் நாட்பூசை எந்த அடிப்படையில் வந்தது?**

கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், வேனில் எனப்பெரும்பொழுதை (ஓர் ஆண்டு) ஆறுவகையாகப் பிரித்தார்கள். அவ்வாறே இன்று வழக்கிலிருக்கும் இருபத்து நான்கு மணி நேரக்கால அளவு உள்ளிட்ட ஒரு நாளை ஆறு வகையாகப் பிரித்து அமைத்தார்கள்.

| | | |
|---|---|---|
| வைகறை | - | 02-06 |
| விடியல் | - | 06-10 |
| நண்பகல் | - | 10-14 |
| எற்பாடு | - | 14-18 |
| (சூரியன் சாயும் காலம் சாயங்காலம்) | | |
| மாலை(முன்னிரவு) | - | 18-22 |
| யாமம் | - | 22-02 |

என்று இவ்வாறு ஒருநாளை ஆறுவகையாகப் பிரித்து வாழ்வியல் வளத்தை உணர்ந்தும் உணர்த்தியும் வந்தார்கள் என்பது தமிழர்தம் மரபியல் முறை.

தமிழர்தம் வாழ்வியல் முறையில் யாமப் பகுதி(ஜாமம்) வந்தேறியது. அது மூன்று மணிக் காலத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்தது. ஒரு நாளில் எட்டு யாமங்கள் அமைந்தன. பகலில் நான்கு யாமங்கள். இரவில் நான்கு யாமங்கள்.

திருக்கோயிற் பூசை முறைகளும் ஆறு அல்லது எட்டு என்ற கால அளவையை அடிப்படையாகக் கொண்டே அமைக்கப்பெற்றன.

மகா சிவராத்திரி விழாவை எடுத்துக்கொண்டால் ஓர் இரவில் நான்கு காலவழிபாடு செய்தல் முறை என்பதை உணருகிறோம். இரவில் நான்கு காலப் பூசை முறையைப் போலப் பகலிலும் நான்கு கர்லப் பூசை முறை அமையவே மொத்தம் ஒரு நாளைக்கு எட்டுக் காலப் பூசை முறை வந்துள்ளமையைச்சில திருக்கோயில்களில் இன்றும் காணலாம்.

இருபத்து நான்கு மணிநேரக் கால அளவை எடுத்து ஆறாகப் பிரித்தும் பூசை முறையை அமைத்துக்காட்டியமை ஆகம வழிபாட்டில் அறிய முடிகிறது.

**வினா: திருக்கோயில் அமைப்புக்கும் ஆறுகாலப் பூசை முறைக்கும் உள்ள தொடர்பு என்ன?**

தில்லை, திருவரங்கம் என்ற இரு திருக்கோயில்களிலும் இன்றும் ஆறுகாலப்பூசை நடைபெற்றுவருவது கண்கூடு.

நாளொன்று ஆறுகாலம், எட்டுக்காலம் என்ற இருவகைகளில் திருக்கோயிற் பூசைமுறைகள் நடைபெற்று வந்தன என்பது மரபியல் முறையால் அமைந்த வரலாற்று முறை.

ஆறுகாலம், எட்டுகாலம் பூசை முறைகளுக்கு மெய்ப்பொருள் - தத்துவவிளக்கம் அமைக்கப் பெற்றது.

தனிமனித ஆன்ம முன்னேற்றத்துக்குச் செய்யப் பெறும் பூசை ஆத்மார்த்தம். பிறர் நலத்துக்காக உலக நலத்துக்காகத் திருக்கோயில் திருமேனிகளுக்குச் செய்யப் பெறும் பூசை பரார்த்தம் எனப்பெறும்.

ஆத்மார்த்தப் பூசை செய்யாதவர் பரார்த்தப் பூசை செய்தற்கு உரியல்லர். ஆனால், இன்று திருக்கோயில்களில் ஆத்மார்த்தம் செய்யாத பலர் பரார்த்தம் செய்வது நாட்டிற்குக் கேடு பயக்கும் என்பதை உணர்தல் இல்லை. இதனைப் ''பேர்கொண்ட 'பூசை எனத்தொடங்கும் திருமந்திரப் பாடல் இடித்துரைப் பதைக் காணலாம்.

ஆத்மார்த்தத்தில் அட்டபுஷ்பம் சாத்தி வழிபடல் வேண்டும். கொல்லாமை, ஐம்பொறி அடக்கல், பொறுமை, இரக்கம், அறிவு, மெய், தவம், அன்பு என்ற எட்டுக்குணங்களால் வழிபடல் வேண்டும் என்பது இலக்கணம்.

பரார்த்தத்தில் இறைவன் அட்டமூர்த்தியாக உள்ளான் (நிலம், நீர், தீ, வளி, வான், சூரியன், சந்திரன், ஆன்மாவின் உள்ளிருந்து இயக்குபவன்) எனக் கொண்டு அவனைப் பூசித்து வழிபடல் வேண்டும்.

இவ்வகையில் எட்டுகாலப் பூசை முறையானது காலத்துடன் இயைத்து இவ்வெட்டினையும் இயக்கி உலகத்தை வளப்படுத்தவேண்டும் என்ற வகையில் அமைக்கப்பெற்றது. இதுவே வழிபாட்டு முறையில் அமைந்த பழைமையான மரபு.

திருக்கோயில் பலவாகக் கட்டப் பெற்ற பின்னர் திருக்கோயிலின் அமைப்பை அடிப்படையாகக் கொண்டு ஆறுகாலப் பூசைமுறை அமைந்தது. திருக்கோயில் ஆறாதார அமைப்பை அடிப்படையாகக் கொண்டது.

மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆற ஆதாரங்களின் வெளிப்புற அமைப்பு எனக் கொண்டு, ஆத்மார்த்தத்தில் ஆறாதார வழிபாட்டைச் செய்த ஒருவன் பரார்த்தத்திலும் ஆறாதார அடிப்படையில் பூசை செய்தல் வேண்டும் என அமைக்கப் பெற்ற முறையும் தமிழகத் திருக்கோயில்களில் மரபு முறையாகக் கடைப்பிடிக்கப் பெற்று வருகிறது.





அருள்மிகு பழநி ஆண்டவர் ஆண்கள் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி வளாகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களின் பவளவிழாவினை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் 75 மரக்கன்றுகளை நட்டார்கள். மேலும் பழநி ஆண்டவர் பெண்கள் தொழில் நுட்பக் கல்லூரியில் கணினி பிரிவினையும் மாண்புமிகு அமைச்சர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தொடங்கிவைத்தார்கள். திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமிகு ஏ.எஸ். ஜீவரத்தினம் இ.ஆ.ப., திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் திருமிகு தே.சி. பழநிசாமி மற்றும் அறங்காவலர் பெருமக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். திருக்கோயில் இணை ஆணையாளரும், நிர்வாக அதிகாரியுமான திருமிகு தி. ஜெயராமன் பி.ஏ.பி.எல்., அவர்கள் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

பதிவு எண். TN (MSC) 7039 / WPP. 1345



சுதந்திரப் பொன்விழா நிறைவினை ஒட்டி 15.8.98 அன்று திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயிலில் நடைபெற்ற சிறப்புவழிபாடு மற்றும் பொது விருந்து விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் நாஞ்சில் கி. மனோகரன், மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு, அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் ஆகியோரும் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

**வெளியிடுபவர்** : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
**ஆசிரியர்** : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
**அச்சிட்டோர்** : பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்., 142, ஜானிஜான் கான் தெரு, சென்னை 600 014.